திராவிடநாடு

24—5—59 | வார வெளியீடு | விலை 16 காசு

மறைந்த மறக்குலத்தாய்

டாக்டர் தருமாம்பாள் அவர்கள்

மேயரும் மெயிலும்!

[illegible] சென்னை மேயர் [illegible] பெருமை.

யாரும் குறைகளை எழுத[illegible]. இதோ, பெட்டி! இதில் போட்டால் உடனுக்குடன், கவனிக்க ஏற்பாடு செய்கிறேன் என்று அறிவிக்கிறார்!!

‘குளுகுளு’ வாசம்செய்து ஓய்வு பெற்றுவிடவில்லை! ஒவ்வொரு இடமாகப் போய்க்கொண்டிருக்கிறார்!

எவரையும் அலட்சியம் செய்ய வில்லை.

சென்னை சிறப்புற, எந்த யோசனை சொன்னாலும், ஏற்கத் தயார் என்கிறார்!!

இவையெல்லாம், பெரிதாகப்பட வில்லை, மெயில் ஏட்டுக்கு! வானொலியில் பேசமாட்டேன் என்று மறுத்ததை வைத்து, வரிந்து தள்ளியிருக்கிறது தலையங்கம்!!

‘மெயில்’ ஏடு மட்டுமல்ல, ‘விகடன்’ தீட்டியிருக்கிறது, ‘கல்கி’யும் எழுதுகிறது.

இந்த ஏடுகள், நம்மவையல்ல! எனினும், நம்மீது எவ்வளவு கண் வைத்திருக்கின்றன என்பதையே இது காட்டுகிறது!!

‘ஆகாஷ்வாணி,’ கூடாது எனச் சொல்லி, அனுதினமும், தங்களைப் பேச அழைக்கும் வானொலியின் அழைப்பை மறுக்கிறவர்கள் பலர்.

அவர்களையெல்லாம் கண்டிக்கும் துணிவில்லை இவைகளுக்கு! ‘விகடன்’ போன்றவை,‘ஆகாஷ்வாணி’யைக் கிண்டல் செய்து, எழுதியதும் உண்டு; ‘கல்கி’ கட்டாய இந்தியின் வைரி என்று தன்னைக் காட்டிக்கொள்கிற ஏடு. எனினும், நமது மேயர் மறுத்தார் என்றதும், எழுதித்தள்ளியிருக்கின்றன!!

[illegible] உடைத்தால் பொன் குடம்! மண் [illegible]த்தால் மண் குடம்!! — என்பார்கள். அதே போல், மொழிப்பற்றின் சூரர்கள் [illegible], இவர்கள் காட்டிக்கொள்ளலாம்; தமிழைத் தாங்கள் வளர்ப்பதாகப் பேசலாம். ஆனால், உண்மையான தமிழ்ப்பற்றினை நாம் காட்ட முன் வந்தால், இந்த ஏடுகளுக்கு, கண்கள் சிவக்கின்றன; ‘போதை’ கொண்டவனைப் போலச் சீறுகின்றன.

ஒன்று தெரிகிறது, நாம் என்ன தவறு செய்வோம்—எங்கே இவர்களைத் தாக்க இரண்டு இடுக்குக் கிடைக்கும் என்கிற புத்தியிருக்கிறதே ஒழிய, நல்லதைப் பாராட்டும் நற்பண்பு இல்லை.

இவைகளின், மட்டரகப் போக்கை, நாம் எடுத்துச் சொல்லும் கட்டத்தில் இல்லை. நாடே இவர்களைக் கண்டிக்கத் துவங்கியிருக்கிறது நம் சார்பில்.

‘மெயில்’ ஏட்டின் தலையங்கம் கண்டு, பின்கண்ட கடிதக் கணைகள் போயிருக்கின்றன. நம்முடைய பொறுப்பை, இதுபோலக் குறைத்திடும் குணவான்கள் நாட்டில் மலிந்து வருகின்றனர்.

‘மெயில்’ ஏட்டுக்குத் தந்த நாட்டவரின் பதிலை, நீங்களும் காண வேண்டுமென்பதற்காக, இங்கே எடுத்துத் தருகிறோம். கண்டித்த மெயிலே இந்தக் கண்டனக்கணைகளையும் வெளியிட்டிருக்கிறது. அந்த வரையில், அதன் ‘பத்திரிகா தர்மத்தை’ மெச்ச வேண்டியதுதான்.

*

ஆசிரியர்
‘மெயில்’

ஐயா,

அகில இந்திய வானொலியின் அழைப்பை ஏற்றுப் பேச மறுத்த சென்னை மேயர் அ. பொ. அரசுவின் செயல் குறித்து,‘ துர்ப்பாக்கியம்’ எனும் தலைப்பில் தாங்கள் எழுதிய தலையங்கத்தின் கருத்துக்களை என்னால் ஏற்கமுடியவில்லை. திரு: அரசு, முதலில், தமிழன்; பிறகு தி. மு. க. உறுப்பினர்; பிறகுதான் சென்னைக்கு மேயர். வானொலியின் அழைப்பை மேயர் ஏற்றிருந்தால், மக்கள் நிச்சயம் அவர் செய்தது குற்றம் என்றே சொல்வார்கள்.

உங்கள்,
டி. இராசாக்[illegible]ண்ணன்.
சென்னை.

ஐயா,

வானொலி என்று பெயரிட வேண்டுமென்கிற கிளர்ச்சியை, வெறும் அரசியல் கிளர்ச்சி என்று மட்டுமே நீங்கள் நினைப்பதாகத் தெரிகிறது. எந்த அரசியல் கிளர்ச்சியும் துவக்கி வைத்த கிளர்ச்சியல்ல, இது. தமிழ் மீதும், தமிழ் நாட்டின் மீதும் பற்றுக்கொண்டவர்கள் துவக்கியதாகும். எனவே, தமிழகத்தின் தலைநகராம் சென்னையின் முதல் குடிமகன், பேச மறுத்தது நியாயமே. சென்னை மக்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், அதற்குப் பல வழிகள் உண்டு அவருக்கு.

உங்கள்,
எம். எம். சிவசங்கரன்.
துறையூர்.

ஐயா,

மக்களுக்குச் செய்திதர, மேயருக்கு உள்ள ஒரே ஒரு வழி வானொலி மட்டும்தானா? எத்தனையோ வழிகள் இருக்கின்றன. சென்னை நகரின் முதற் குடிமகன் என்ற நிலையில் அவர் என்ன செய்தாரோ, அதைத்தான் அவர் செய்திருக்க வேண்டுமென்று தமிழ்நாடு முழுதும் விரும்பும். தமிழ் நாட்டின் விருப்பத்தை நிறைவேற்றியிருக்கிறார் மேயர் இது, கட்சி விவகாரமல்ல. கட்சியையும் தாண்டித் தன் கடமையைச் செய்திருக்கிறார் அவர்.

உங்கள்,
எஸ். மோகன்தாஸ்.
கோவை.

மலர் 17] ஆண்டுச் சந்தா ரூ. 8. (24—5—59) தனிப்பிரதி 16-காசு [இதழ் 45

அந்தோ அன்னையை இழந்தோம்

தமிழ் நாட்டுத் தாயக்குலத்திற்குப் புத்துயிர் அளித்து, அவர்களுக்கெல்லாம் வீரமும் விவேகமும், நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும், இனப்பற்றும் இலட்சியத்தில் உறுதியும் உண்டாக்கியதன் வாயிலாகத் தமிழ்நாட்டவர் அனைவரின் உள்ளங்களிலும் உயிரேபோல் ஒன்றியிருந்த அன்னையார் டாக்டர் தருமாம்பாள் அவர்கள் தமது எழுபத்திரண்டாவது வயதில் இயற்கை எய்திவிட்டார்கள் என்ற செய்தி எல்லோரையும் திடுக்கிடச் செய்துவிட்டது.

1938-ல் சென்னை நகர வீதி வழியே வீர நடைபோட்டுப் "போவோம் புறப்படுங்கள்" என்ற எழுச்சிக் கீதம் பாடி, இந்தி எதிர்ப்புப் போரின் முன்னணித் தலைவியாகப் பணியாற்றிப் பல நூற்றுக்கணக்கான தாய்மார்களுடன் சிறைக்கோட்டம் புகுந்த வீரச் செயலை எவரே மறக்கமுடியும்!.

இன்று, கலையுலகில் ஒளிவிட்டு மின்னும் பல நட்சத்திரங்களின் நல்வாழ்வும் நன்மதிப்பும், மறைந்த டாக்டரம்மையார் அவர்களால் ஏற்பட்டதே என்று கூறுவது உண்மையை ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொல்வதாகும்.

மறைந்த அம்மையாரின் மாண்புமிகு செயல்களைச் சில எழுத்துக்களால் மட்டும் எடுத்துக் கூறுவது, அவர்களின் அருஞ்செயல்களை அறியாதார் செய்யும் காரியமாகும் என்ற அச்சத்திற்கு ஆளாகி, மேலும் ஏதும் எழுத, அன்னையாரைப் பிரிந்ததால் ஏற்பட்ட இதயக் குமுறல் இடந்தரவில்லை என்பதைக்கூறி, எம்மைப்போல் அன்னையாரின் பிரிவால் வருந்தும் டாக்டர் சிற்சபை, சமரசம் ஆகியவர்களுக்கும், மற்றும் அன்னையாரது ஆதரவுக்கும் அன்புக்கும் ஆளான அனைவருக்கும் எமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

★ பெருகட்டும் ★

தீரர் கே. வி. கே. சாமி உலவிய திருநெல்வேலி மாவட்டத்தின் கழக மாநாடு, இந்தக் கிழமை, சீரும் சிறப்புடன் தென்காசியிலே நடைபெற்றிருக்கிறது! தலைமை வகித்த கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களின் வீர உரையினையும், செய்யப்பட்ட தீர்மான முடிவுகளையும், கழக ஏடாம் 'நம் நாட்டில்' காணலாம். மாநாட்டின் சிறப்பினையும், அந்தச் சிறப்புக்குக் காரணமான மாவட்டத் தோழர்களின் ஆர்வத்தையும், எடுத்துச் செல்ல இயலாது; ஏடும் கொள்ளாது; நாட்டின் நாடியினை உணர்த்திற்று அம்மாநாடு எனலாம்! வந்து கூடிய ஆர்வமிக்க வாலிபர்களையும், இவர்கள் சொல்வதைக் கேட்போம் என்று வருகை தந்த வயோதிகப் பெரியவர்களையும், அன்பு மிக்க தாய்மார்களையும், அங்கே கண்டோம். அடடா, அருங்காட்சி! காணற்கரிய காட்சி!!

அண்மையில் காரைக்காலிலும் பிறகு புதுவையிலும், மாநாடுகள் நடைபெற்றன. ஆர்வமிக்க தமிழ்த்தும்பியாம் தசரதன், சட்டமன்ற வீரர் எம். பி. சுப்பிரமணியம், ஆகியோரின் தலைமையில், சேலம் தந்த இராசாஇராமும், சென்னை மணி கோகுலகிருட்டினனும் துவக்கிவைக்க, இம்மாநாடுகள் நடந்தன. அந்தச் சூடும், வேகமும் குறைவதற்குள் நெல்லை மாவட்ட மாநாடு! குமரி முதல் சென்னை வரையில் தினசரி பொதுக்கூட்டங்களும், மாவட்ட, கழகப்பணியின் அளவுகோலாக ஆங்காங்கு இதுபோன்ற மாநாடுகளும் நடத்திக்காட்டுகின்ற, ஒரே ஒரு கட்சி உண்டென்றால், உலகத்திலேயே நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான். ஓய்விலாது உலாவரும் பிரச்சாரகர்கள்! கூட்டம் நடத்தாத ஊரினைத் தேடி, கூட்டம் நடத்தவும், கழகம் துவக்கவும் ஆர்வம் காட்டும் தோழர்கள்! நாடகமாடி, நம் கொள்கை சொல்வோர்! போட்டி போட்டுக் கொண்டு, மாநாடுகளை, நடத்தும் வேகம்!—இவைகளில், நம்மை மிஞ்சியோரில்லை. இப்படிச் செய்திட, மாற்றுக் கட்சியினர், முயன்றிடினும், பணத்தைச் செலவழித்திடினும், பலன் கிடைப்பதோ பரிதாபமாயிருக்கிறது. எனவே 'சீச்சி இப்பழம் புளிக்கும்'

என்ற கதைபோல், முயன்று தோற்கும் முத்தண்ணுக்கள், முனக ஆரம்பிக்கின்றனர், "என்ன தெரியும் இவர்களுக்கு? கூட்டம் போடத்தெரியும்! மாநாடு நடத்தத் தெரியும்! நன்ருகப் பேசத்தெரியும்!'' என்று.

கூட்டம் நடத்துவதென்பது, கிள்ளுக் கீரையல்ல! அதேபோல, மாநாடு ஒன்று நடத்தி, பல்லாயிரக் கணக்கான மக்களைத் திரட்டிக் காட்டுவதென்பதும் எளிதல்ல!! இவைகளைச் செய்தோருக்குத் தெரியும், இந்த முயற்சிகளின் அருமை. எனினும், கூட்டம் நடத்துவதும், மாநாடுகள் நடாத்துவதும், ஏதோ கேவலமான செயல் போலவும், இவர்கள் ஏதோ எண்ணாயிரம் கூட்டங்களும் ஒன்பதினாயிரம் மாநாடுகளும் நடத்திக்காட்டுவோர் போலவும், பேசுகின்றனர்.

வலிவுறும் ஒருவிடுதலை இயக்கத்துக்குப்பிரச்சார பலம் முக்கியமானதாகும்! அந்தப் பலம் ஒன்றைக் கொண்டுதான், விடுதலை இயக்கங்கள், வளர்வதும், தேய்வதும். விடுதலை எண்ணம், நாட்டு மக்களின் மனதுக்குள் நுழையவேண்டுமென்ருல், அந்த எண்ணத்தைச் சுமந்து சொல்லும் மார்க்கங்கள் அவசியம் தேவை. ஏடுகள், நாடகங்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவைதான், இந்த மார்க்கங்கள். இந்த வழிகள் பலவும் கிடைத்து, இவைகளின் மூலம் மக்கள் மன்றத்தை எட்ட ஆரம்பித்துவிட்டதென்ருல், அந்த விடுதலை இயக்கம், பழுத்துவருகிறது என்று பொருள். அப்படி பழுத்து வருகிற விடுதலை இயக்கமாகி வருகிறது, நமது கழகம். இதனை யாரும் மறுக்கமுடியாது.

கூலிக்கு மாரடித்து, குடும்பத்தின் வயிற்றைக் கழுவக் கொள்கைபேசி, உலவுவோரல்ல நமது கழகத்தினர். கூட்டங்கள் நடக்க நடக்க 'போதும்' என்று இருந்துவிடுவதில்லை. 'இந்த மாநாட்டுக்குத்தான் போனேமே' என்று பிரச்சாரகர்களும், தள்ளிவிடுவதில்லை. ஒவ்வொன்றும், புதுவிருந்தாகிறது! விருந்து அருந்த அருந்த, பசி அதிகமாகிறதே ஒழிய, அடங்குவதில்லை!! — அப்படித்தான், நாம் என்ன, புதிய செய்திகளைத் தருகிரேம் என்று பார்த்தாலோ, ஏதுமில்லை. எந்தக் கூட்டத்திலும், எந்த மாநாட்டிலும், எவர் பேசினுலும், நாயகவிடுதலை எனும் ஒரே முழக்கத்தைத்தான் செய்கிரேம். அதனைக் கேட்க, 'காசு' கொடுத்தும், திரள்கின்றனர் மக்கள் எனின், விடுதலையின்பால், மக்களுக்கோர் வேக உணர்ச்சி பரவி வருகிறது என்று பொருளாகும்.

ஒரு வேடிக்கை, நினைத்துப்பார்த்தால், பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்படும். நேருபிரான், முன்பொரு முறை வந்தார்! 'நான்சென்ஸ்' எனும் இகழ்ச்சியை நமக்குத் தந்தார்!! இப்போது, இங்கு, யாராவது அந்த வார்த்தையை உபயோகித்தால், உடனே, நேருவின் நினைவுதான் வருகிறது. அந்த ஆங்கிலச் சொல்லினை அறியாத கிராம மக்கள்கூட, 'நான்சென்ஸ் என்பது நம்மைப்பற்றி நேரு திட்டிய வாசகம்' என்பதை நன்ருக உணர்ந்து கொண்டிருக்கிருர்கள். கடமை — கண்ணியம்—கட்டுப்பாடு, என்று மூன்று சொற்களை நாம் பெற்ருேம். இப்போது, இந்தச் சொற்களில் எதனை உச்சரித்தாலும், அது கழகத்தவரைக் குறிக்கும் சொல் என்று கருதப்படும் நிலை மலர்ந்திருக்கிறது. இப்படி, சொற்கள்கூட, நம்மால் புது இடம் பெறுகின்றன, ஒருமுறை நாம் அதனை உச்சரித்து நமது தோழர்களும் எடுத்தாள ஆரம்பிக்கிருர்கள் என்ருல், அவைகளுக்கு ஒரு புது மதிப்பும் உறவும் ஏற்பட்டுவிடுகின்றன. இது, நம்முடைய திறமைக்கு சான்று என்று கூறிப் பெருமையடையவில்லை, நாம்! ஒரு விடுதலை இயக்கம் எடுத்தாளும் சொற்களுக்கு, இப்படி ஒரு மதிப்பு ஏற்படுகிறதெனின், அந்த இயக்கம் வளர்ந்துவிட்டது என்று பொருளாகும்!!

அண்மையில் நமது பொதுச் செயலாளரும், துணைப் பொதுச் செயலாளரும் பம்பாய்க்குச் சென்று வந்தார்கள். அங்கே, நமது கழகக் காவலர்களை, பத்திரிகை நிருபர்கள் சந்தித்து உரையாடினுர்களாம். 'மாஞ்செஸ்டர் கார்டியன்' போன்ற வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களும், வந்து, விபரம் தெரிந்து கொள்ள ஆவல் காட்டுகின்றனர். ஏன்? எப்படி? இவர்கள் என்ன அவ்வளவு பெரிய மனிதர்களா?— என்று பொருமுவோர் உண்டு இங்கே. என்ன செய்வது! விடுதலை இயக்கம், வளர்ந்துவிட்டதே, வேகமாக!!

இந்த வளர்ச்சியின் அளவினை யாரும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை; அதேபோல, வளர்ச்சியைக் கண்டு, மகிழ்ச்சிப் போதையில், நாம் ஆழ்ந்துவிடுவதற்குமில்லை. நம்முடைய கூட்டங்கள் என்ருலே, மக்கள் நத்தாத காலமிருந்தது! மக்கள் கூடுகின்றனர் என்பது, பிறகு, பெரியதோர் காட்சியாயிருந்தது! நம்மைப்பற்றி, ஏடுகள்யாவும், ஒருமுகமாக அலட்சியம் செய்த நாட்கள் ஏராளம்! நாம் என்ன சொல்கிருேம் என்பதில் ஏடுகள், அக்கரை செலுத்த ஆரம்பித்தது, பெரிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இரண்டொருவர் நகராண்மைக் கழக உறுப்பினர்களாக வருவதென்பதே நமக்குப் பெரிய சேதியாயிருந்தது! இப்போதோ, நகராண்மைக் கழகங்களையே நாம் நடத்தவேண்டிய கட்டம் வந்திருக்கிறது!! அவதிப்பட்டவனுக்கு ஆனந்தம் கிடைத்ததும், பசித்தவனுக்குப் பால் சோறு கிட்டியதும், பரவசத்தையே தரும். ஆனல், அதே சமயத்தில் ஒன்றை நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

இதெல்லாம், நமக்குக் கிடைக்கவேண்டியவைதான்!!

கொஞ்சம் நாள் கழித்துக் கிடைக்கின்றன என்பதைத் தவிர்த்து, இவையாவும் விடுதலை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த இயக்கத்துக்கும் நிச்சயம் கிடைக்கும்.

கிடைத்தது
போதுமா!

எனின், கிடைத்தவை — கிடைப்பவையாவும் நம்முடைய இறுதி இலட்சியமல்ல, நமக்குக் கிடைக்க வேண்டிய, உண்மையான இடம், தொலைவிலிருக்கிறது. அதை நாடிச் செல்வதற்கு, நமக்குக கிடைக்கும் படிக்கட்டுகளாகும் இவை!!

கூட்டங்கள், மாநாடுகள், நாடகங்கள், ஏடுகள் நடாத்திடும் நமது தோழர்கள் அனைவரும் இதனை மறந்திடலாகாது.

நாம் போகவேண்டிய
கட்டங்கள் பலஉள!!

அவைகளை நோக்கி, முன்னேறவேண்டும். அதற்கு நம் குரல், இன்னும் எட்டாத இடங்களுக்கெல்லாம் எட்டவேண்டும். எல்லா ஊர்களிலும் கழகங்கள் ஏற்பட்டாகவேண்டும்.

கழகம், புதுக்கட்டம் புகுந்துவிட்டது!

அதனை, மேலும் கொண்டுசெல்லும் தகுதியும், பொறுப்பும் நமக்குப் பெருகவேண்டும்!!

★

ஒற்றுமை காண உழைப்போம்

‘‘ஒன்று பட்டால் உண்டு வாழ்வு—ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே’ என்னும் கவிதையை, அதன் கருத்தை அறியாதார் இல்லை. ‘ஒற்றுமை’ —‘ஒற்றுமை’ என்னும் ஒலி கேட்காத இடமும் இல்லை, குடும்ப வாழ்க்கை முதல் குவலயச் சிக்கல் வரை—இந்த ‘ஒற்றுமை வலியுறுத்தப்படுகின்றது. ஊராள்வோரும், உலகஞ் சுற்றுவோரும், ஆதிக்கவாதிகளும், அரண்மனை வாசிகளுங்கூட அடிக்கடி ‘ஒற்றுமை’ உபதேசம் புரிந்துவருகின்றனர்.

ஒற்றுமையையும் அதன் பயனையும் மக்கள் உணராமலும் இல்லை.

அவரவருடைய நிலையிலும் வாழ்க்கை முறையிலும் இந்த ‘ஒற்றுமை’ பயன் படுவதற்கேற்ப இதனை உணர்ந்துதான் உள்ளனர்.

‘ஒற்றுமை’ கூடாதுஎன்பாரில்லை. இயலவில்லையே என்பவர்கள்தான் பலர். ஆனால் ஒற்றுமை என்றால் என்ன? அதற்கான வழிவகைகள் யாவை? என்பதையோ, பலரும் அறிவதில்லை.

ஓர் ஆணும் பெண்ணும் கூடும் கூட்டமுங்கூட முழு இன்பம் பயக்க வேண்டுமெனில், கருத்தொருமித்து ஆதரவுபட்டதாக அமைய வேண்டும். ஒற்றுமை இன்மை காதலர் வாழ்விலும் — துன்பத்தையே சேர்க்கும்.

அந்த உள்ளங் கலக்கச்செய்யும் ஒற்றுமையே வெவ்வேறளவிலும் தரத்திலும், குடும்பம், தெரு, ஊர், வகுப்பு, சமுகம், இனம், நாடு, உலகம் முதலிய பல்வேறு எல்லைகளுக்குள்ளும் நிலைகளிலும் உள்ள மக்களை ஒன்றுபடுத்தும் கருவியாகும். இரண்டு பேர் முதலாக இரண்டு உலகங்களிடையே (கிழக்கு-மேற்கு அல்லது பழைய—புதிய உலகங்கள்) ஏற்படும் தொடர்பு வரையில் இந்த ‘ஒற்றுமை’ வேண்டப்படுகிறது.

உலகமே ஒற்றுமையினால் தழைத்தோங்க முடியும். ஒற்றுமை தேய்ந்து, வேற்றுமை வெறுப்பாக மாறிப்பகையும் போரும்பெருகினால் எரியும் புகையும் சூழ்ந்த உலகம் அழியத்தான் நேரும். அதிலும் இன்று வளர்ந்துள்ள விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களான நாசகுண்டுகளால், அழிவு எல்லையற்றதாகி, காட்டுத் தீயென உரைக்கும்படி உலகே உயிர்ப்பொருள் ஏதுமற்ற சுடுகாடு ஆகிவிடக்கூடும். எனவே ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு மட்டுமல்ல ‘அழிவே’ விளையும் என்பது தெளிவு.

இந்நிலையில் ‘ஒற்றுமை’யைத் தெரியவேண்டுமன்றோ. ஒருசிறு குடும்பம்; தந்தையின் அன்புத் தலைமை, தாயின் அருள் உழைப்பு,

க. அன்பழகன்,
எம். ஏ., எம். எல். ஏ.,

மக்களின் ஆசை கலந்த அடக்கம் இவற்றால் அக்குடும்பம் ஒற்றுமையாகத் திகழ்கிறது. ‘அன்பு’ ஒற்றுமையாக உருப்பெருகுகிறது, குறைகளும் எளிதாகக் களையப்படுகின்றன.

மாறாகத் தந்தை எதேச்சாதிகாரியாகித் தாய்பொறுமையற்றவளாகி மக்கள் அடக்கமற்றவர்களானால் அன்பு வெறுப்பாகிக் குடும்பம் குழப்பத்தில் ஆழும். அன்பும் பெற்றெடுத்த பற்றும் அற்றுவிடுமானால் குடும்பம் ஏது? எனவே ஒரு குடும்பத்தில் வாழும் தாயும் சேயுமானாலும், வாயும் வயிறும், அறிவும் உணர்வும் வேறுதலின், அவரவரும் அவரவருடைய பொறுப்புணர்ந்து, பண்புடன் நடந்துகொண்டால்தான் ‘ஒற்றுமை’ நிலவும்.

பல குடும்பங்களில் வயது வந்தோர், வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொண்டவுடன் தனிக் குடும்பம் (குடித்தனம்) அமைத்துக் கொள்கிறார்களே, அது ஒற்றுமையாலா என்று எண்ணலாம். ஆம்! அது வேற்றுமையின் அடையாளமன்று. வளரவேண்டிய உரிமைகள் நன்றாகவும் இயல்பாகவும் வளர ஒரே குடும்பம் இடந்தராது, பின்னர் அதனாலேயே இடர் விளையலாம் என்பதாலேயே மகிழ்ச்சியோடு புதுக் குடும்பங்கள் அமைக்கப்படுகின்றன. புதுக் குடும்பத்தால் ‘ஒற்றுமை’ கேடுறாததோடு வளரக்கூடிய மாறுபாடுகள் தவிர்க்கப்பட்டு ஒற்றுமை வலிவு பெறுவதையும், மற்றும் பாசமும் வளர்வதையும் நாம் காண்கிறோம்.

உரிமை உயர்வு வளரும்போது அண்ணனும் தம்பியும் உடைமைகளைப் பங்கிட்டுக்கொள்வது—பிற்கால ஒற்றுமைக்கு வழிசெய்யும். பங்கிட்டுக்கொள்ள இடமின்றி உரிமை உணர்வு முட்டி மோதிக் கொள்ள வழிசெய்வது என்நாளும் பகைகொள்ளச் செய்வதேயாகும்.

எனவே ‘ஒற்றுமை’, பலர் ஒன்றாக ஒரே இடத்தில் இணைந்திருப்பதும் அன்று, அப்படி இணைந்திருப்பதாலே ஏற்படுவதும் அன்று. வேற்றுமை; பலர் தனித்தனியாக வாழ்வதுமன்று. தனி உரிமைகள் வேற்றுமையின் அடையாளமுமாகா.

ஒன்றாக வாழினும், தனித்தனியே பிரிந்து வாழினும், தம் அனைவரது வாழ்வுக்கும் நன்மை செய்யக்கூடிய ஒன்றையோ, அன்றி ஒரு சிலவற்றையோ அவர்கள் எல்லோருமாக ஏற்றுக்கொள்வார்

களானால், அப்பொழுதுதான் ஒற்றுமை ஏற்படுகிறது. ஒரு கூட்டத்தாரின் பொது நோக்கமே (பொது நலம்) அவர்களை ஒன்று சேர்க்கின்றது. பரந்த நோக்சுத்தைப் பற்றியே நாளும் பேசிக்கொண்டு, தன்னல நோக்கமே மிகுந்து பொதுநல நோக்கம் குறைந்துள்ள சமுகத்தில் (இன்றைய தமிழரைப் போன்று) ஒற்றுமை குறைந்திருப்பதையே காணலாம்.

மக்கள், எந்தெந்த வகையால் ஒரு கூட்டமாக — ஓர் இனமாக உருவாகின்றார்களோ, அந்தந்த வகையால் அவர்களிடம் ஒவ்வொரு பொது நோக்கம் உருவாகியுள்ளதையும் காணலாம்.

'சமுக மக்களே ஒன்றுபடுங்கள், உரிமையைக் காத்து நில்லுங்கள்' —என்று சமுகக் கூட்டத்திலும் 'நாமெல்லாம் ஒரு தாய் மக்கள்' என்று ஒரு மொழிவழியினரிடமும் 'நாமெல்லாம் இந்நாட்டு மன்னர். நாடு நமதென்பதுணர்ந்தோம்' என ஒரு நாட்டவரிடமும் 'உலகத் தொழிலாளிகளே ஒன்றுபடுவீர்' என்று—பாட்டாளி வர்க்கத்திடமும் பேசப்படுவதைக் காணலாம். இந்தப் பொது நோக்கே அவ்வக் கூட்டத்தாரை இணைப்பதாகும்.

'பொது நோக்கம்' பொதுவான பல பண்புகளாலோ, பழக்கவழக்கங்களாலோ, குறைகளினாலோ விருப்பங்களினாலோ அமையலாம். ஒரு வகுப்பாரைப் பழக்க வழக்கங்களும், ஒரு கூட்டத்தாரைத் தற்காப்பு உணர்ச்சியும்-ஒரு ஊராரைப் பொதுத்தேவைகளும், ஒரு சமயத்தாரை அம்மத நம்பிக்கைகளும், ஒரு மொழியினரை அம்மொழிப் பற்றும், அம்மொழி வளர்த்துள்ள பொதுக் கருத்துக்களும், ஒரு கட்சியினரை அதன் கொள்கைகளும் இலட்சியமும் —ஒன்றுபடுத்துவனவாகும்.

இவ்வாறு ஒன்றுபடுத்தும்போது, நோக்கங்களுக்கும் வேற்றுமைகள் ஏற்படுவது இயற்கை. ஒற்றுமை ஏற்படும் முறையிலேயே வேற்றுமையையும் விளைவிக்கத்தான் செய்யும். சமுகத்திற்குச் சமுகம், மொழிக்கு மொழி, சமயத்திற்குச் சமயம், கட்சிக்குக் கட்சி நாட்டுக்கு நாடு, வேற்றுமை நிலவுதல் இயல்பே. அவை ஒவ்வொன்றும் தனித்தனிநோக்கும் போக்கும் இயல்பும் திறனும்கொண்டு செயல்படுவதால் ஒன்றை ஒன்று ஒத்திருப்பதற்கில்லை. குடும்பத்திற்குக் குடும்பம். வேற்றுமை இல்லாமற் போகுமா? அவ்வாறே—இந்த ஒற்றுமைகளும் இயல்பாகக்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டத்து வேற்றுமை முரணாக வளர்ந்து வாழ்வையே கெடுக்கும்.

எனவே, ஒற்றுமை கெடாமல் இருக்க, வேற்றுமைக்கு இடமளிக்க வேண்டும். கருத்து, இலட்சிய வேறுபாடு பழக்க வழக்க வேற்றுமை முதலிய மனிதத் தன்மையின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படவேண்டும். அத்தகு அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுதல் கூடாது. வேற்றுமை—என்பதை நீக்குவதாக எண்ணிக்கொண்டு முரணை (மாறுபாடு-பகை) வளர்த்துவிடக் கூடாது.

இருவரது வாழ்வுக்கு மற்றொருவர் செயல் தடைக்கல் ஆகக்கூடாது. ஓர் இனத்தவரின் வாழ்விற்கு மற்றோர் இனம் தடையாகக் கூடாது. தடையானால், தனித்தனியாக மட்டுமே அதுகாறும் இயங்கிய கூட்டங்கள் இரண்டும் தமக்குள் பகை கொள்ளும்.

இயற்கையேகூட வேற்றுமையின் விளைவிடந்தான். ஒன்றினின்றும் ஒன்று இணைத்தல் மூலம் தோன்றிய பொருள்களும், உயிரினங்களும் பலப்பல. மக்களும் பல வகையினர். கருப்பர், வெள்ளையர், பழுப்பு நிறத்தினர், மஞ்சள் இனத்தவர் என்ற நிற வேறுபாடுகளும், உடல் வலிவு, அறிவுத்திறன், உள்ளப் பண்பாடு ஆகியவற்றால் விளையும் வேறுபாடுகளும் பல. ஓரினத்துள்ளும், மனிதனுக்கு மனிதன் விரலுக்கு விரல் உள்ளதுபோல் வேறுபடத்தான் செய்கின்றனர். இந்த வேறுபாடுகளைக் களைய இயலாதபோது-பகை விளைவதை எப்படித் தடுக்கமுடியும் என்று கேட்கலாம்.

ஆம்; 'வேற்றுமைகள்' எப்பொழுதும் நிலைப்பவையே, ஆனால் வேற்றுமைகள்-பகையாக--முரணாக வளரவேண்டிய அவசியமே இல்லை. பகைக்கு இடமாகாதபோது, அதே வேற்றுமைகளேகூட, ஒற்றுமைக்கு இடந்தரும்.

வேற்றுமை பகையாக, மாறுவானேன் என்று எண்ணலாம். ஓர் இனம் தனது உயர்வு, நலம் ஆகியவற்றிற்காக மற்றோர் இனத்தைத் தாழ்த்த, சுரண்ட முயற்சிக்கும் போதும், அம்முயற்சியில் வெற்றிபெற்று அதையே முறையாக்கிவிடும் போதும் 'பகை அரும்பி—வளர்கிறது.'

வட இந்தியாவில் நுழைந்த ஆரியர், அதற்கு முன்பாகவே அங்கு வாழ்ந்த திராவிடரை அசுரர், தஸ்யூக்கள், அடிமைகள், சூத்திரர்கள் என்று பெயரிட்டு அழைத்து ஒதுக்கியும் வைத்தனர். தென்னாட்டிலே புகுந்த இந்து புரோகித வகுப்பார், தமது சாதி நலத்திற்காக, நால்வகைச்சாதியை, வர்ணாஸ்ரம தர்மத்தைப் புகுத்தி, மனு நீதியை-தென்னாட்டிற்கும் நீதியாக்கினர். தீண்டாமையையும் புகுத்தினர். மேல்நாட்டார் பலர், கீழ் நாடுகளையே தமது அடிமைக் காடுகளாக, வாணிபச் சந்தைகளாக ஆக்கிக் கொண்டனர்.

வெள்ளை நிறத்தவர், வேறுநிறத்தவரைச் சமமாகக் கருத மறுக்கின்றனர். தென்னாப்பிரிக்க வெள்ளையர் அங்குள்ள நீக்ரோவர்களை இன்றளவும் இழிவாகவே கருதிக் கொடுமைப்படுத்துகின்றனர்.

ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்ட நரிகள், புலிவேஷம் போடுவதுமின்றி, மற்றவர்களை எலியென, முயலெனத் தாழ்த்திக் குருதியையும் குடிக்கின்றன. வாழ்வை இழந்து வதைபடுவோரின் உள்ளங்கள் புகையத் தொடங்குகின்றன. உரிமை உணர்வு தோன்றியவுடன் புகைந்த எரிமலை, நெருப்பைக்கக்குகின்றது.

எனவே எந்தெந்த வகையாக உரிமை உணர்வு அரும்பினாலும், அது ஒரு குறிப்பிட்டத்தக்கூட்டத்தாருக்கு நன்மை தருமானால், அந்த உரிமை உணர்வு உலகோரால் மதிக்கப்படவேண்டும். அதுகாறும் அதற்குத் தடையாக இருந்தவர் விலகுதல் வேண்டும். இல்லையேல் அதுகாறும் 'ஒற்றுமை'யாகக் காணப்பட்டது வெறும் தோற்றமே என்பது விளங்கும்படி பகை வளரும்.

ஏகாதிபத்தியவாதிகளும் குடியற்ற நாட்டுக் காவலர்களும், பிற நாட்டவர் உரிமையைப் பறிக்கின்றனர். பேரரசுகளும், ஏக ஆட்சிக் கொள்கையினரும் வட்டார வளர்ச்சியையும், தனிக்கலை நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சியையும் தடைப்படுத்துகின்றனர். மொழி வெறியர்கள்—தமதுமொழி ஆதிக்

கத்திற்காக நாட்டு மொழி வாழ்வையே குலேக்கின்றனர். வாணிப வேந்தர்களும், தொழில் மன்னர்களும் தமது சுயநல சூழ்ச்சித் திட்டத்தால் தொழிலாளர் உழைப்பையும், பொதுமக்கள் நலத்தையும் தாமே கைப்பற்றிக்கொள்கின்றனர். இப்படி—எத்தனையோ துறைகளில் மனிதத் தன்மைக்கு இடமளிக்கப்படாமல் அடிமைத்தனம் நிலைநாட்டப்பட்டு வருகின்றது.

இங்கிலையில், அடிமைப்பட்டோர் விடுதலை, உரிமை, வாழ்வு அல்லது சாவு என்று அலறிப்போராட முனையும்போது, அந்தக் குமுறலை ஒடுக்க நினைக்கும் ஆதிக்க பீடத்தினர் 'ஒற்றுமை' உபதேசிகளாகின்றனர்—பல்லக்கிலே பவனி வரும் பரமார்த்த குரு, பல்லக்குத் தூக்கிகள் 'இனி எம்மால் முடியாது' என்று தூக்குவதைக் கைவிட்டதைக் கண்டதும், அவர்களது பரம்பரைப் பழக்கத்தையும் அதனுல் வரும் புண்ணியத்தையும் எடுத்துக் கூறிப் பல்லக்கைத் தூக்கச் சொல்லுவது போல!

இன்று ஒற்றுமையாகத் தோன்றும் பல காட்சிகள் ஒற்றுமையின் விளைவாக அமைந்தவை அல்ல. சர்க்கஸ் காட்சியில், சிங்கத்தின் மீது சிறு நாய் அமருவதையும், புலிக் கூட்டத்திடையே புகுந்து விளையாடும் ஆட்டையும், குதிரையில் சவாரி செய்யும் குரங்கையும் கண்டுள்ளோம் அல்லவா? அது போன்றே அச்சம், சூழ்நிலை, அறியாமை, ஆதாரவின்மை, வறுமை, சூது, சூழ்ச்சி முதலிய பல்வேறு காரணங்களால் பலப்பல இணைப்புகள் பலப்பல 'பொய்யான ஒற்றுமைகள்' ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல் விழுந்த கிழவனது சொத்துக்கு வாரிசு தயாரிக்கக் கடைப்பல்லும் முளைக்காத கன்னி வாழ்க்கைத் துணையாவதைக் காணவில்லையா? அப்படித்தான் கன்னித் தமிழ் மொழி வழங்கும் தென்னுடும், சமஸ்கிருத ஆதிக்கத்திற்கு இடந்தந்தது; இன்று வடவரது ஆட்சியையும் தாங்கிக்கொண்டுள்ளது!

இதை ஒற்றுமை என்று கொள்வது புரையோடிய புண்ணின் கதையேயாகும். எனவே 'ஒற்றுமை' அவரவரது உரிமை அவரவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யும் முறையிலேயன்றி, வெறும் உதவியினுலோ, சிறுசிறு ஆதரவுகளினுலோ, இணைப்பை வலுப்படுத்தும் முறைகளினுலோ ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் ஆற்றலினுலோ அமைவதாகா என்பதை உலகு உணரவேண்டும்.

உண்மையில் தமிழரது நிலையை எண்ணிப்பாருங்கள். தமிழர்களை விடப் பரந்த நோக்கம், நல்லெண்ணம் இவற்றைக்கொண்ட வேருெரு இனத்தாரைக் காணமுடியுமா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்பட்ட நாகரிகத்தை வளர்த்து உலகிற்கே வழி காட்டும் முறையில் மனித சமுதாயத்தையே ஓர் குடும்பமாகக் கொண்டவர்கள் தமிழர்.

'யாதும் ஊரே, யாவருங்கேளிர்'—தமிழர்கட்கு எல்லாம் தம் ஊரே, எல்லோரும் உறவினரே, என்று கூறி மக்கள் எல்லோரையும் ஒரினமாக உணரச்செய்யும் இத்தொடர், சங்கப்பாடலில் உள்ளதாகும்.

சாதிமத வேற்றுமைகளும், பல தெய்வ வழிபாடுகளும் வளர்த்த முரணை அகற்றவே "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்னும் அறிவுரையும்,

'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்—சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்னும் குறள் நெறியும் பிறந்தன.

மக்கட் பிறப்பிலே சமத்துவம்' கடவுட் கருத்திலே பொதுமை, சமய நோக்கிலே சமரசம், உலகியல் நோக்கிலே பரந்து செல்லும் நல்லெண்ணம் இவற்றைக் கொண்டவர்களாக வாழ்ந்ததாலேதான் அன்பு, ஈகை, ஒப்புரவு, தன்னல மறுப்பு, சான்ருண்மை முதலிய சிறந்த பண்புகள் வளர்ந்தோங்கி, எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேருென்றை விரும்பாத நெஞ்சமும் முகிழ்த்தது. ஆம், இந்த அளவு உலகு வாழ எண்ணியவர்கள்தான் தமிழர். முதன் முதல் இத்தகு உயர்வுள்ளம் பிறந்ததே தமிழகத்தில்தான். ஆனுல் தமிழர்களின் இன்றைய நிலை என்ன?

உலகம் வாழ வழிகண்ட உத்தமர்களின் வழிவந்தோர், இன்று தாம் வாழ வழியின்றித் தவிக்கின்றனர். உழைத்து உழைத்து உருக்குலேகின்றனர், குருதி கொட்டுகின்றனர், கண்ணீர் சிந்துகின்றனர். அவர்களது மாசற்ற அறிவு, தனிப் பொதுநெறி, பேரறம், மதிப்பாரற்று மங்குகின்றது. அடிமையும் மிடிமையும் அவர்களை ஆட்கொண்டலேக்கின்றது. ஒற்றுமை 'தமிழர்களிடையே' இல்லை. பொருமையும் பூசலும் அவர்களை அழுத்துகின்றன. 'உரிமையின்' ஒளியையும் அவர்கள் காணவில்லை. ஆம், பழம்பெரும் புகழ் படைத்த பெருநெறி கண்ட தமிழ் மக்களுக்கு இன்று ஒரு 'தாயகம்' இல்லை. தாயகம் நிலப்பரப்பளவிலேதான் குறிப்பிடப்படுகிறது, உரிமையும் ஆட்சியும் இழந்த நிலையில்.

அவர்களது உலகாண்ட மொழி, தங்கள் நாட்டின் ஆட்சி மொழியாகவும் அமையவில்லை. ஆண்டவனை வழிபடும் ஆலயங்களிலும் இடம்பெறவில்லை. கல்வித்துறையிலும் உயர் தகுதிபெறவில்லை. இசைத் துறையிலும்கூட ஒதுக்கப்பட்ட நிலைக்கே ஆளாகிக் கிடந்தது. வாழ்வின் துறைகள் தோறும் தன் மொழி புறக்கணிக்கப்படுகிறது.

இலங்கையில் யாழ்ப்பாணமும் வட இலங்கையும் தமிழரின் பகுதியேயாகும். அங்கும் அவர்களது உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. சிங்களவர்களின் ஆதிக்க வெறி அல்லல் விளைவிக்கின்றது. தமிழை அழிக்க—ஒழிக்க முற்படுகிறது.

சொந்தமான இடங்களிலேயே இந்நிலை எனில், குடியேறிய நாடுகளில், தமிழர்களின் நிலை கூறும் தரத்ததாமோ?

இலங்கையிலே குடியேறிய தமிழர்களே உரிமை பறிக்கப்பட்டு விரட்டப்படுகின்றனர்! தென்னுப்பிரிக்காவில் சம உரிமை பெருது அல்லலுறுகின்றனர். மலேயா, பர்மா, இந்தோசீனு, சாவா, சுமத்ரா முதலிய பல நாடுகளிலும் பல்வேறுபட்ட தொல்லைகள் அவர்களைப் பிடர்பிடித்து உந்துகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் வட பகுதியிலேயே — பலப்பல நகரங்களிலே—தமிழர்கள்—பொதுவாகத் தென்னுட்டார் — மதராஸ்வாலாக்களாக வெறுக்கப்படுகின்றனர். வடநாட்டில் எந்தத்தொழில் நிலையமும், நிறுவனமும் தமிழனுக்கு—திராவிடனுக்கு வேலை தர விரும்பவில்லை.

இந்நிலையில் உலகின் எந்தப் பகுதியில் வாழும் தமிழனும் தன் சொந்த நாட்டையே திரும்பிப்

பார்க்கிறான். திரும்பிவிடலாமா என்று எண்ணும் அவனைத் திரும்பினால் வாழ்வுக்கு என்னசெய்வது என்ற அச்சம்-துன்பமும் தொல்லையும் மிகுந்து வறுமையும்வாட்டமும் வளைத்தாலும்—அங்கங்கேயே உழலச் செய்கிறது.

தம் நாட்டில் உள்ளவர்களிலேயே பலர் எங்கே குடியேறலாம் என்று ஏங்குகின்றனர். தமிழ்நாடு-தமிழர்க்குச் சொந்தமாக இல்லை, மாற்றாந்தாய் அகமாகவே உள்ளது. வேற்றுமொழியான இந்தியின் ஆதிக்கமும், வேற்று இனத்தவரின் சுரண்டலும், தமிழர் அல்லாதவரின் ஆதிக்கமும் தமிழரின் வாழ்வை — அடிமை வாழ்வாக அமைத்துள்ளது. அடிமைகளுக்கிடையே பொது நோக்கமும் சிறக்காமையால், ஒற்றுமையும் குறைந்திருக்கிறது.

இந்நிலையை மாற்ற, தமிழர் மொழிப் பற்றும், இன உணர்ச்சியும் கொண்டோராக வேண்டும். தன்மொழிப்பற்று உலகில் எந்தப் பகுதியில் வாழும் தமிழனையும் ஒன்றாக்கவேண்டும். அவனது நலத்தில் நாட்டமுடையதும், அவனைக் காப்பாற்ற முன்வருவதுமான வகையில் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகக் கொண்ட முழு உரிமையுள்ள நாட்டையும் தமிழர் காணவேண்டும். அதற்குத் துணையாகும் இன உணர்ச்சியையும், உரிமைவேட்கையையும் வளர்க்கவும் வேண்டும்.

இந்தக் குறிக்கோள் வெற்றி பெறும்போதுதான் 'ஒற்றுமை' பொருள் உடையதாகும். உலக ஒற்றுமையும், திருக்குறளின் பொன்னனை கருத்துக்களால் எளிதாகும். தமிழும், குறளும் உலக மன்றங்களில் இடம் பெறும்படி செய்யும்உரிமை நமக்குண்டு. அந்த உரிமையைப் பெறும் நாள்தான், 'ஒற்றுமைக்குப் பொருள் காணும் நாளாகும். அல்லாதவரை அடிமைகளும் ஆண்டைகளும் சேர்ந்து எந்த அமைப்பிலும் ஒற்றுமையை நிலை நிறுத்தமுடியாது' என்பதை உலகோர் உணரவேண்டும்.

அதே போல் நாமும், ஒற்றுமையின் பேரால் அடிமை வாழ்வை ஏற்பதைவிட, உரிமை வாழ்விற்காக 'உயிரையே' இழக்கவும் உறுதிகொள்ளவேண்டும். உரிமை வாழ்வே ஒற்றுமை வழி என்பதையும் நிலைநாட்ட வேண்டும்.

(த—மு)

ஆந்தையாரின் அரசியலறிவு

—[தென்னடன்]—

பகுத்தறிவும், அரசியலறிவும், நாகரிகமும் முந்தைய நாட்களைவிட அதிகமாக—செவ்வையாக வளர்ந்திருக்கவேண்டிய இந்த நாட்களில், அது எவ்வளவு தூரம் அமுங்கிப்போய், அநாகரிகமாக மாறிப்போய் விட்டிருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்தால், நமக்கு வெட்கமாகவும்; வேதனையாகவும் இருக்கிறது.

நமது அரசியல் மேதைகளில் மக்களைக் காப்பாற்றும் விரதம் ஒன்றையே தங்கள் கங்கணமாகக் கட்டிக்கொண்டிருப்பவர்களில்— யாராவது ஒருவர் — இந்தப் பக்கத்தைச் சற்று எட்டிப் பார்ப்பார்களேயானால் ஆந்தையாரின் அரசியலறிவு எவ்வளவு கருத்தாழத்தோடு, பரந்த நோக்கத்தோடு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பிசிராந்தையார் படம் பிடித்துக் காட்டும் சங்க காலக் காட்சி ஒன்றை இந்தக் காலக் கண் கொண்டு பார்ப்போம், வாருங்கள்.

* * *

பச்சைப் பசேலென்று செழித்து வளர்ந்திருக்கின்றது ஒரு நெல் வயல். பசுஞ்சாலிக் கொத்துக்கள் நன்கு முற்றித் தலை சாய்த்துப் பருவப் பெண்போல் நாணிக்குனிந்து நின்றுகொண்டிருக்கின்றன. பறவையினங்கள் ஆனந்தத்தோடு, அவ்வப்போது கதிர்களைக் கொத்துவதும், கல்லடிபட்டுப் பறந்தோடுவதுமாக இருக்கின்றன.

அந்தச் சமயத்தில்—

அங்கே வருகிறது பெரும்யானை ஒன்று. மிகுந்த பசியால் வருந்திக் கொண்டிருக்கும் அந்த யானையின் சின்னஞ்சிறு கண்களுக்கு செழித்து வளர்ந்திருக்கும் அந்த நெல் வயல் தென்பட்டுவிடுகிறது. உடனே அது வாளா நிற்குமா? பசியோ யானைப் பசியாயிற்றே! விரைந்தோடி நெல் வயலில் புகுந்தது. துதிக்கையை நீட்டி மணிக்கதிர்களை வளைத்து வளைத்துத் தன் வாய்க்குள் நுழைத்து உண்ண ஆரம்பித்துவிட்டது. பெருவாரியான இடங்களிலெல்லாம் தன் அகன்ற பாதங்களை வைத்து நடந்து நடந்து ஏராளமான நெற் பயிர்களைத் தன் காலடியில் நசுக்கி வீணாக்கியது. அதன் வாய்க்குள் சென்ற தானியங்களைவிட, எத்தனையோ மடங்கு தானியங்கள் அதன் காலடியில் சிக்கி அழிந்தன. இவ்வளவு உணவுப் பொருள்கள் நம்மால் வீணாகின்றதே என்று அந்த யானை எண்ணவில்லை. யானைக்கு அவ்வளவு அறிவு உண்டா? கிடைத்தவரை இழுத்து எறிந்துவிட்டுத் தன் பசி அடங்கியதும் மெதுவாகக் களத்தைவிட்டு வெளியேறியது யானை.

பரந்த வயல் பாழடைந்து கிடந்தது. ஒரு நெற்கதிர்கூட நிமிர்ந்து நிற்கவில்லை. அத்தனையும் நிலத்திலே, சேற்றிலே அமிழ்ந்து நாசமடைந்து கிடந்தன. நெல்மணிகள் எங்கும் பரவிச் சிதறிக் கிடந்தன. யானையின் முரட்டுத்தனமான சூறுவளிக் கொள்ளையில் அத்தனையும் நாசம்! நாசம்!

இந்த நிலையைக் கண்டார் நம் சங்க காலச்சான்றோர். பெரிதும்

(13-ம் பக்கம் பார்க்க)

சொல்வேறு--செயல்வேறு

ச. இராமலிங்கம், எம். ஏ.,

அன்புள்ள எழிலி,

நாம் மாநகர் ஆட்சி மன்றத்தில் பெரும் வெற்றியோடு அமர்ந்த பிறகு, நாம் எந்த ஒரு செய்கை செய்தாலும் "ஆகாத மனைவி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்" என்ற நோக்கில் இன்று நம்மேல் கணைகளைத் தொடுக்க ஏராளமானவர் இருக்கத்தான் இருக்கின்றார்கள்.

"மெல்லுவதற்கு ஏதாவது கிடைத்தால் போதும்" இந்தக் காலத்து பத்திரிகைகளுக்கு. அண்மையில் நம்முடைய மாநகராட்சி மன்ற மேயர் திரு. அ. பொ. அரசு அவர்கள் வானொலியில் பேச மறுத்துவிட்டார், தான் ஒரு தமிழன் ஒரு திராவிடன் என்ற காரணத்தினால். இதைக் கண்டித்து விகடனார் குறிப்பிட்டிருக்கிறார் தனக்கே உரிய குறும்புடன்.

"நகரத்தின் மேயர் பதவியை ஏற்றுள்ளவர் விவாதத்திற்குரிய செயல்களிலோ, அரசியல் கட்சிகளின் கிளர்ச்சிகளிலோ பங்கு கொள்வது கூடாது" "மேயர் பதவிக்காகப் பல பழக்க வழக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றான வானொலி நிலையத்தாரின் அழைப்பை ஏற்க மறுத்து அதை ஓர் அரசியல் பிரச்சினையாக மாற்றியது முறையான செயலாகப் படவில்லை."

பார்த்தாயா, நம்முடைய தோழர். திரு. அ. பொ. அரசு அவர்கள் வானொலியில் பேச மறுத்தது "முறையான செயலாகப்படவில்லை" விகடனாருக்கு— ஏன் தெரியுமா! அவர் அகில பாரதக் கண்ணோட்டம் உடையவர்— வடக்கின் அடிவருடி—. தன்னுடைய நாடு, மொழி, இவை இரண்டிலும் பற்று இல்லாத காரணத்தினால் தான் இப்படி எழுதியிருக்கிறார்.

"கண்களைப் பறிகொடுத்துச் சித்திரம் வாங்கும் தவறும், நாட்டை, மொழியை பறிகொடுத்து பட்டம் பதவிபெறும் தவறும் மன்னிக்க முடியாத தவறுகளாகும்"

அதைபோதான் நம்முடைய தோழர் சொல்லாலன்றி செயலாலும் காட்டியிருக்கிறார்— வானொலி என்ற பெயர் வைக்காததற்கு மறுத்திருக்கிறார்! இது அனைவருக்கும் தெரிந்ததே! அப்படி இருந்தும் தமிழே! என் மூச்சு என்று சிலம்பை ஏந்திச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுபவர் முதல் யாவரும் தன் மானத்தை விற்று வானொலியில் கலந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

"ஆகாச வாணி" வேண்டாம் "வானொலி" என மாற்று என்கிறோம்! இதிலென்ன தவறு! இதில்கூட என்ன அரசியல் பிரச்சினை இருக்கிறது! இது மொழிப் பிரச்சினை! — மாற்றுவிட்டால் என்ன? ஆகாஷ்வாணி என்று வானொலியில் சொன்னால் தமிழ் என்ன செத்தா போய்விடும் என்று கூட ஒரு சில சிறு மதி படைத்தோர் கேட்கத்தான் இருக்கின்றனர்.

அதோடு மட்டுமல்ல எழிலி, விகடனார் சென்ற வாரம், உதய சூரியனுக்கு, வரவேற்பு அளித்து விட்டுக் கடைசியாக மறைமுகமாக "தெருக்களின் பெயரை மாற்றுதல், வேண்டியவர்களைப் போற்றுதல், வெற்றிப்பறை சாற்றுதல், இவை போன்றவைகளில் ஈடுபட்டு பொது காரியத்துக்காக ஏற்பட்ட பொன்னான நேரத்தை வீணாக்க வேண்டாம்" என்று கூறியிருக்கிறார்.

எழிலி! நாம் தெருப்பெயரை மாற்றவும் இல்லை, மாற்றச் சொல்லவும் இல்லை—அவர்களைப்போல்! கடைசியில் மாநகராட்சி மன்றத்தை விட்டுப் போகும்போது கூட ஒரு பெரிய அறிஞர் பெயர் சூட்டப்பட்டிருந்த சாலையின் பெயரை மாற்றிவிட்டுத்தான் சென்றிருக்கிறார்கள் அந்தக் கண்ணியவான்கள். ஆனால் நாம் மாற்றச் சொல்வது ஒரு சிலருக்காக அல்ல! ஒரு சிலருக்குப் புகழும் பெயரும உண்டாக்க அல்ல— ஒரு இனத்திற்கே களங்கம் உண்டாகாமலிருக்கத்தான்! தமிழன் என்றொரு இனம் உண்டு அவனுக்கு ஒரு தனிமொழியும் உண்டு என்பதை எடுத்துக் காட்டத்தான் இந்த மாற்றத்தை நாம் கோருகிறோம்.

இந்தப் பெயர் மாற்றத்தில் என்ன இருக்கிறது! நீங்கள் எப்போதுமே இப்படித்தான்! டால்மியாபுரத்தை கல்லக்குடி என்று மாற்றச் சொன்னீர்கள்! சென்னை மாநிலத்தை தமிழ் நாடு என்று மாற்றச் சொல்கிறீர்கள்! இதெல்லாம் வீண். மாற்றாவிட்டால்தான் என்ன? என்று கேட்போரை நான் கேட்கிறேன் இன்றைய தினம் காசிக்கு என்ன பெயர்? ஏன் மாற்றினார்கள்!

அண்மையில் நம் திருநாட்டிலேயேதான் ஒரு பெயர் மாற்றம் நடந்திருக்கிறது! எதற்கும் குதர்க்கம் பேசும் திரு. சுப்பிரமணியனார் அவர்களே இந்த மாற்றுப்பெயர் சூட்டுவிழா செய்திருக்கிறார்— உதகையில் உள்ள உல்லாச மாளிகை ஆரண்மூர் மாளிகை— தமிழகம்—ஆகிவிட்டது! ஆகாஷவாணியை ஏன் வானொலி என்று மாற்றவேண்டும் என்று சொல்லுவோர் ஆரண்மூர் அரண்மனை

என்ற பெயரை ஏன் மாற்றினார்கள்? நாட்டின் பெயரை மாற்று என்றால், அதற்குத் துணிவும் திறனும் இல்லாத இந்த கண்யவான்கள் இன்று வீட்டின் பெயரை மாற்றியமைத்திருக்கிறார்கள்! நாம் தமிழர், என்று உலருக்கு தெரிய வேண்டுமென்றால், நாட்டின் பெயரை தமிழ்நாடு என மாற்றி உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டுமே ஒழிய, வீட்டிற்குள்ளே தமிழன், தமிழகம் என்று சொல்லிப் பெருமைபட அவசியமில்லை.

உனக்குப் புரிந்திருக்கும் எழிலி, நான் எழுதியிருப்பது. ஆனால் அவர்களுக்கு புரிந்திருக்காது, ஏனெனில் அவர்களுடைய "தோல்கள் தடிப்பேறிவிட்டன" எழிலி! இப்படி நான் எழுதுவதை நீ வெறுப்பாய் என்று தெரியும்! இவ்வளவு காட்டுமிராண்டித்தனமாகவா நீங்கள் எழுதுவது என்று கேட்பாய். எழிலி நான் இதை எழுதவில்லை. ஈழத்தமிழ் நாடு, இணுவையூர் செ. நடராசன் அவர்கள் வானொலி என்ற பெயர் மாற்றத்தைப்பற்றி—நம் நாட்டில் உள்ள நிலையைப் படம்பிடித்துக் காண்பித்திருக்கிறார். "தமிழ் நாட்டில் உள்ள வானொலியை ஆகாசவாணி என்று கூறவேண்டாம் என்று தன்னையே கேள்வி கேட்டு வேகாமல் வெந்தார் இளவழகன் என்று ஒரு இளைஞர். இவையொன்றும் சூடு சொரணையற்ற தமிழருக்குப் புரியவில்லை. பதவியால்சிலருக்கு தோல்கள் தடிப்பேறிவிட்டன. மற்றுஞ் சிலருக்கோ நீண்டகால அடிமை வாழ்வால் புத்தி மரத்துவிட்டது. அதனால் தான் வானொலியென்று வைக்க வேண்டாம் என்று கூறி வேறொருவர் உண்ணா நோன்பிருந்தால் என்ன செய்வது என்று கேட்டார் ஒரு தமிழ்ச் செம்மல்" தனக்கே உரிய ஒரு தனி மொழியின் பெயரால் தன் நாட்டிற்குப் பெயரிட மறுக்கிறார்கள் இந்தக் கண்யவான்கள். இதைக்கண்டு "தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள்" நாமும் வெட்கமடைகிறோம் வேதனைப்படுகிறோம்! "உன் கண்ணில் நீர் சுரந்தால் என் கண்ணில் உதிரம் கொட்டுதடி" பாரதியாரின் பாடல் நினைவுக்கு வருகிறது. தமிழன்னையே! உங்கள் கண்ணீரைத் துடைக்க நாங்கள் செந்நீர் சிந்தத் தயார்! தாயே! அடிமை விலங்கை தகர்த்தெறிந்து உங்களை விடுதலை செய்ய இதோ புறப்பட்டுவிட்டோம் இதோ புறப்பட்டுவிட்டோம்" என்று சூளுரைத்துப் புறப்படத்தான் தோன்றும்—தமிழன், தன்மானமுடையவனாக இருந்தால்.

இதைவிட எழிலி! நம்முடைய மொழியில் சொன்னால், நம்முடைய முறையில் சொன்னால் அவர்களுக்குப் புரியாது! ஏனென்றால் அவர்கள் எதற்கெடுத்தாலும் வடக்குக்கு காவடி தூக்கிக்கொண்டு செல்லுவார்கள். ஆகவே அங்கு நடந்த ஒன்றையேஉதாரணமாகச்சொல்ல விரும்புகின்றேன். சின்னாட்களுக்கு முன்பு வினோபாஜியிடம் ஒரு சீடர் வந்து சேர்ந்தார்—அவரோ ஹாலந்து நாட்டைச் சேர்ந்தவர்—அவர் பெயர் அலெக்ஸாந்தர். அவர் சீடராகி, சர்வோதய வேலைகளில் ஈடுபடுவதற்கு முன்பு, திரு. பவே அவர்கள், அலெக்ஸாந்தரை உங்கள் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். சர்வோதயத்தில் ஈடில்லா நம்பிக்கையும், பற்றுதலும் கொண்ட காரணத்தினாலோ என்னவோ அவர் தன் பெயரை திரு. பவே அவர்களையே மாற்றும்படி கேட்டுக் கொண்டார். தாயும் தந்தையும் அன்போடும் கனிவோடும் அழைத்த அலெக்ஸாந்தர் அல்ல அவர் பெயர் இன்று! அவர் இப்போது "முக்திதாஸ்" இப்படி திரு. பவே அவர்கள் அவர் பெயரை ஏன் மாற்றச் சொல்லவேண்டும் என்று அவர்களே நினைத்துப் பார்க்கட்டும்.

சொல்வேறு செயல் வேறாக இருக்கக் கூடாது என்பதை எடுத்துக்காட்டத்தான், தான் ஒரு தமிழன் என்று எடுத்துரைக்கத்தான், தான் தன்மானமுள்ளவன் என்பதை அறிவிக்கத்தான் திரு. அ. பொ. அரசு அவர்கள் மறுத்திருக்கிறார்.

ஆனால் எழிலி! இன்றைய தினம் செய்தித்தாளில் கண்ட ஓர் செய்தியை என்னென்று சொல்வது! உலகிற்குச் சமாதானம் கற்பிக்கும் இந்த 'ஒட்டு' இந்தியாவின் செயல்களைக் கண்டித்து இங்கிலாந்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது! தங்கள் கொடியில் அசோகச்சின்னம் பொறித்து, இராமராஜ்யம் நடந்துகிறோம் என்று பஞ்சசீலத்தைப் பாரில் பரப்பிவரும் இந்தப் பண்டிதர் ஆட்சியில் நடந்த காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து அஹிம்சையை உணர்த்துகிறது இங்கிலாந்து. அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை இச்செய்திகண்டு.

"புத்தம் சரணம் கச்சாமி" என்று ஜபித்து உலகிற்கு அஹிம்சையின் தத்துவத்தை பரப்பிவரும் இந்த அஹிம்சாவாதிகளுக்கு, கருணாமூர்த்தி காந்தியின் சீடர்களுக்கு—அஹிம்சையை உணர்த்துகிறது—அதோடு இவர்கள் செய்கையையும் கண்டித்திருக்கிறது. என்னவென்று தெரிந்து கொள்ளத் துடியாய்த் துடிக்கிறாய் என்று தெரிகிறது!

ஒரு பிரிட்டிஷ் அதிகாரியும் அவர் மனைவியும் இன்பம்கொள்ள ஒரு களியாட்டம் விரும்பினார்களாம் இந்த ஒட்டு இந்தியாவில், அஹிம்சாமூர்த்தி மகாத்மாகாந்தி பிறந்த நாட்டில். களியாட்டம் தானே அதிலென்ன இருக்கிறது என்று நினைக்கிறாய். அல்ல—எழிலி அல்ல. நீ நினைப்பதுபோல் குடித்துவிட்டுக் கும்மாளம் அடிக்கும் அவர்களுடைய சர்வசாதாரண களியாட்டம் அல்ல. இது உயிர்ப்போராட்டம். இரண்டு விலங்குகள் — அவற்றின் உயிர்ப் போராட்டம்-தான் அவர்களுக்கு களியாட்டமாக அமைக்கப்பட்டது. எழிலி! சொன்னால் ஆச்சரியப்படுவாய்! ஓநாயும் ஆடும் அடுத்தடுத்து ஒரே ஆற்றில் நீர் குடிக்கும் எங்கள் ஆட்சிக் காலத்தில் என்று சொன்ன இந்தக் கண்ணியவான்கள் காலத்தில் தான்; என்ன தெரியுமா நடந்திருக்கிறது. ஒரு பக்கம் கோரைப்பல் காட்டிச் சீறி எழும் புலி. மறுபக்கம் அந்தோ பரிதாபம் ஒரு சாதாரண எருமை. இவைகள் இரண்டிற்கும் உயிர்ப்போராட்டம் நடத்தி அதை அவர்களுக்குக் களியாட்டமாக்கி இருக்கிறார்கள் இந்த அஹிம்சாவாதிகள். இந்தச் செய்கையைக் கண்டித்துத்தான் இங்கிலாந்திலிருந்து செய்தி, திருமதி விஜயலட்சுமி பண்டிட் அம்மையாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது!

அந்தோ எவ்வளவு மதியீனம்! எங்கே காந்தியாரின் அஹிம்சை! எங்கே பண்டிதரின் பஞ்சசீலம்! சொல்வேறு செயல்வேறாக காட்டுபவர்கள் யார்? யார்? அவர்களே? தெரிந்துகொள்ளட்டும்.

உன் அன்புள்ள,
இன்பன்.

சாவுக்குக் காரணம்?

மாலை மணி 5-30.

பொன்னேரி லோக்கல், சென்ட்ரல் நிலையத்தில் கம்பீரமாக நின்று கொண்டு இருந்தது.

கனகம் ஒருகையில் துணி மூட்டையும் மற்றொரு கையில் சிறிய தகரப்பெட்டியுடனும் மிக விரைவாக நடந்துவந்து பொன்னேரிக்குப் போகும் அந்த லோக்கல் வண்டியின் பெட்டி ஒன்றில் ஏறி உட்கார்ந்தாள். என்றைக்கும் இல்லாமல் அன்று பொன்னேரிக்கு அதிக மக்கள் சென்றுகொண்டிருந்தனர். காரணம் மீஞ்சூருக்குப் பக்கத்தில் இருக்கும் காட்டூர்க்கிராமத்தில் இலட்சுமி அம்மன் கோயில் நெருப்புத் திருநாள் தான்!

பாவம், கனகம்; பெண்கள் வண்டியில் ஏறாமல், வண்டி எங்கே புறப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தாலும், தன் மனத்தை எங்கோ அலையவிட்ட காரணத்தாலும் ஏதோ ஒரு பெட்டியில் ஏறி உட்கார்ந்துவிட்டாள். கனகம் தனது மூட்டையையும் பெட்டியையும் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, எப்படியோ இடம் பிடித்து ஒரு மூலையில் உட்கார்ந்து, அப்பாடி! என்று சிறிதுஉரக்கவே சொல்லிப் பெருமூச்சுவிட்டாள். கனகம் விட்ட பெருமூச்சால் எதிரில் உட்கார்ந்திருந்த சிலர், தங்கள் கவனத்தைக் கனகம் பக்கம் செலுத்தினர்.

கனகத்திற்கு வயது பதினேழு. வயதுக்கேற்ற உடற்கட்டு. உடற்கட்டுக்கு ஏற்றவாறு மாந்துளிர் மேனியும், புன்முறுவல் பூத்த முகமும், மூங்கில்போன்ற தோள்களும், தாமரைப்பூ போன்வ நறு நாற்றமும் உடைய அவளைச் சிலர் வைத்த கண் வாங்காமல் பார்த்தனர். இத்தனை இளமையும் அழகும் கொண்ட அவளுடைய முகத்தில் கவலைக் குறிகளும் துன்பச் சாயலும் படிந்திருந்தது. ஆனாலும் அந்த முகத்திலே அவள் ஒரு பெரும் வெற்றியை நாடிச்செல்வது போன்றஓர் எக்களிப்பானபார்வையும் படர்ந்திருந்தது. வண்டி சென்ட்ரலை விட்டுப் பேசின்பிரிட்ஜ் நிலையத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது.

கனகம் மிக அவசரமாகக் குனிந்து தகரப்பெட்டியை எடுத்து மடியின்மீது வைத்துத் திறந்து ஒரு சிறு கடிதத்தை எடுத்துப் படிக்கலானாள்.

'அன்புள்ள கனகத்திற்கு,

என் உயிர்நாடியே! நீண்ட நாட்களாக உன்னைச் சந்திக்கவில்லையே என்று என்மீது வெறுப்புக்கொள்வாய். எனது ஏக்கத்தால் உனது உடலில் பசலை படிந்திருக்கும். உனது தாய் உன் கைக்கு மிக அழுத்தமாகச் செய்து போட்ட தங்க வளையல்கள் இப்பொழுது ஒருவேளை கழன்றுவிடும் அளவுக்கு இளைத்திருப்பாய் என்று நினைக்கிறேன்! அதேசமயத்தில் நானும் உன்னைக் காணாது தவிக்கும் தவிப்பை இயற்கை நன்குஅறியும். உனது ஏக்கத்தால் நான் — மனம் உடைந்த நிலையில், கவலைப் பெருக்கத்தால் எனது

கிருவை அனுசூயா—மோகனசுந்தரம்

தலைமுடி சிறிது சிறிதாக நரைபெற்று வருகிறது. ஒருவேளை, யான் கிழவனாகிவிட்டேன் என நீ வெறுத்து ஒதுக்குவாயோ என்ற அச்சமும் என்னை வாட்டுகின்றது. உனது அறிவையும் பண்பையும்நீள நினைக்குந்தோறும், உன்மாட்டு அதிகப் பற்றும் ஏற்படத்தான் செய்கிறது. ஒரு நல்ல நூலினைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் அந்நூலில் பொதிந்த பொருள்கள் புதுப்புதுக் கருத்துக்களை அறிவித்தவண்ணம் இன்பம் பயப்பதாய், மீண்டும் மீண்டும் அந்நூலினை விரும்புதலைப்போல—பல நாள் உன்னுடன் பழகி இருப்பினும், மீண்டும் மீண்டும் உன்னைக் காணவேண்டும் காணவேண்டும் என்ற எண்ணம் மாறிமாறித் தோன்றிய வண்ணம் இருக்கிறது. மேலும்மேலும் உன்மாட்டு அதிக அன்பையே சொரிந்து நிற்கிறது எனது நெஞ்சம்.

நான் நேற்று முன்னாள்தான் "எம். ஏ," பட்டம் பெற்று முடித்தேன். பட்டம் பெற்றபோது நீ அருகில் இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பாய் என்று எண்ணினேன். அதே ஏக்கத்தில் எனது பட்டத்திற்கு அறிகுறியாகத் தந்த சான்றிதழோடும் பட்டமளிப்பு உடையோடும் சென்று எனது படுக்கையில் அப்படியே குப்புறக் கவிழ்ந்து படுத்தேன். இரவு 9-30 மணிக்கு எனது தாய் உணவுக்காக என்னை எழுப்பியபோதுதான் சுயநினைவு பெற்றேன்.

கனகம், நீ நாளைமாலை புறப்பட்டு மீஞ்சூர் இலட்சுமி அம்மன் கோயில் நெருப்புத் திருவிழாவிற்கு வந்துவிடு. எப்படியாவது உன்னைக் கோயிலில் அடையாளங்கண்டு, நேரே உனது அண்ணன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். உனது அண்ணன் எனது வருகைக்காகத் துடியாய்த் துடித்துக் கொண்டிருப்பான்.

இப்படிக்கு, உன்னுடைய

கமலக்கண்ணன்.

கனகம் கடிதத்தை இரண்டு முறை படித்தாள். பின்னர் கடிதத்தை மடித்து மீண்டும் பெட்டிக்குள் வைத்துப் பெட்டியை மூடுவதற்கும் வண்டி மீஞ்சூர் நிலையத்திற்கு வருவதற்கும் சரியாக இருந்தது. வண்டியும் நின்றது. மீஞ்சூரும் வந்துவிட்டது. நெஞ்சம் விம்மிப் புடைத்தவாறு தனது மூட்டை முடிச்சுகளுடன் மீஞ்சூரில் இறங்கினாள்.

இரயிலைவிட்டு இறங்கிய கனகம், ஒருவேளை தன் இன்னுயிர்க் காதலன் கமலக்கண்ணன் வந்திருப்பான் எனச் சுற்றுமுற்றும் பார்த்தாள். கமலக்கண்ணனைக் காணோம். பின்னர் இலட்சுமி அம்மன் விழாவிற்குப் போகும் மக்கள் கூட்டத்தோடு கூட்டமாய் நடந்தாள். அதே இரயிலில் அவள் அத்தை மகன் சந்திரனும் வந்து அவளைப் பின்தொடர்ந்தான். இந்தச் செய்தி 'கனகம் நீ தனியாகவா வந்தாய்?' என்று பின்னால் இருந்து சந்திரன் குரல் கொடுத்தபோதுதான் தெரியவந்தது.

ஆமாம், அண்ணா, வீட்டிற்குத்தான் போகிறேன் என்று பதில் கூறியவாறு தொடர்ந்து நடக்கலானாள். மேலும் தொடர்ந்து சந்

திரனிடம் பேச விரும்பவில்லை. அதற்குள் தன் அண்ணன் வீட்டிலிருந்து இரட்டைமாட்டு வண்டி இரயிலடியை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது. அதில் தன் அண்ணன் பாண்டியனும் உட்கார்ந்திருக்கக் கண்டாள். கனகத்திற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வெட்கமும் வேதனையும் கலந்தவாறு நடக்கலானாள். வண்டியும் அருகில் வந்தது. தனது அண்ணன் பாண்டியன் கனகத்தைப் பார்த்து "அம்மா! கமலக்கண்ணனை இரயில் நிலையத்தில் பார்த்தாயா? எவ்வளவோ வேகமாகத்தான் வந்தேன். வழியில் மாடுகள் தண்ணீர் குடிக்க வேண்டியதாய் இருந்தது. மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி வர நேரமாயிற்று. கனகம்! நீயும் வருவதாக எனக்கு ஒரு கடிதம் எழுதக் கூடாதா? இப்படிப்பட்ட விழாக்களை முற்றிலும் நீ வெறுத்துப் பேசுவதால், நானும் உன்னை வந்து கலந்துகொள்ளும்படி சொல்லவில்லை. சரி, கமலக்கண்ணனைப் பார்த்தாயா எனக் கேட்டவாறு வண்டியைவிட்டு இறங்கிக் கனகத்தை வண்டியில் ஏறுமாறு வேண்டினார்.

கனகம்,தான் கமலக்கண்ணனைப் பார்க்கவில்லை எனக் கூறிக் கொண்டே வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். வண்டி மீண்டும் திரும்பி ஊருக்குப் புறப்பட்டது. கனகம் தன் அண்ணன் தன்னிடம் மேலும் தொடர்ந்து பேசாமல், கண் கலங்கியவாறு தலை குனிந்து மௌனமாக வருவதைப் பார்த்த பாண்டியன், 'கனகம்! மனத்திற்கு என்ன கவலை. அக்காள் ஏதாவது கோபித்தாளா? தேர்வுகள் முடிந்து விட்டனவா? விடுமுறைஎப்போது? நான் ஏதாவது தவறாகக் கடிதங்கள் எழுதினேனா? உன் அம்மா இருந்தால் உனது படிப்பைக் கண்டு எவ்வளவு மகிழ்வாள். நாம் கொடுத்துவைக்கவில்லை' என்று கூறியவண்ணம் இதமான மொழிகளைப்பேசிக் கனகத்தின் மனவாட்டத்தை மாற்ற முயன்றான் பாண்டியன்.

கனகம் தன் முகக் கவலையை வலிந்து சிறிது மாற்றிக்கொண்டு, ஒன்றுமில்லை அண்ணா, ஏதோ இவ்வாண்டு இலட்சுமி அம்மன் விழாவில் உங்களை எல்லாம் ஒரு முறை சந்திக்கவேண்டும் என்பது எனது கடைசி ஆசை. எனது கல்லூரித் தலைவி எனது கல்வியின் திறத்தை ஒருவாறு அறிந்து, நான் அடுத்த ஆண்டு பாஸ்ட்டன் கல்லூரிக்குமேல்படிப்புக்குச்செல்ல வேண்டும் என்றும், அதற்கான உதவிச் சம்பளம், செலவுத் தொகை அனைத்தும் எனது பெயருக்கே எழுதிப் பெற்றுவிட்டதாகவும் கூறினாள். எனக்கும் நமது குடும்பத்தில் ஒருவராவது மேலை நாட்டிற்குச் சென்று வரலாமே என்ற எண்ணத்தால் நானும் சம்மதத்தால் தலை அசைத்துவிட்டேன். அதனால்தான் தேர்வு முடிந்ததும் உங்களையெல்லாம் ஒரு முறை பார்த்துவிட்டு உங்கள் ஒப்புதலையும், அண்ணியின் ஆசியையும் பெற்றுப்போகலாம் என்று வந்தேன் என மிக்க பணிவாகத் தன் அண்ணனுக்குப் பதில் கூறினாள்.

கனகத்தின் பதில் சரியானபடி வரவில்லையென்றும், அவள் பதில் கூறும்போது விம்மலும் சோகமும் உடைய குரலாக இருந்ததால், மேலும் தன் தங்கையைக் கேள்விகள் கேட்டு துன்புறுத்தாமல், அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றான் பாண்டியன்.

பாண்டியனுக்கு மட்டும் மனம் சரியில்லை. தன் உயிர்த்தோழன் கமலக்கண்ணன் வராததற்குக் காரணம் யாதாய் இருக்கும்? என மிக்க வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல் தன் தமக்கையும் முன் அறிவிப்பு இன்றி, யார் துணையும் இன்றி தனியே வந்ததற்குக் காரணம் எதுவாய் இருக்கும் என்ற எண்ணமும் உடன் கலந்தது. ஆகவே பாண்டியன் நிம்மதியின்றி வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான்.

இரவு இலட்சுமிஅம்மன் கோயில் நெருப்புத் திருவிழாவில் கலந்து கொள்ளும்படி நண்பர்களும் கோயில் தருமகர்த்தர்களும் நேரில் வந்து பாண்டியனை அழைத்திருந்தும் விழாவிற்குப் போக மனம் இல்லாமல் வீட்டில் தனது மனைவி மேகலையையும் மகள் செந்தமிழ்ச் செல்வியையும் அழைத்துத் தனது தமக்கையுடன் போய் வரும்படி கூறிவிட்டு, ஏரிக்கரையை நாடி ஓய்வெடுக்கச் சென்றுவிட்டான். காரணம் இம்மாதிரி விழாக்கள் அவனுக்கு முற்றிலும் பிடிக்காது. ஏன்? பாண்டியன் குடும்பத்திற்கே இம்மாதிரி விழாக்கள் பிடிக்காது. ஆயினும் அவ்விழாவில் பொய்க்கால்குதிரை, மயில் நடனம், நாதஸ்வர இசை முதலியவைகளையாவது காணட்டும், இளமை உள்ளத்தவர்கள் தானே என்று எண்ணியும் தனது மனைவியைச் சென்றுவருமாறு பணித்தான்.

கனகம் தனது அண்ணியுடன் திருவிழாவிற்குச் சென்றாள். விழாவில் வந்துள்ள பல ஆடவர்களையும் மிகக் கவனமாக, அவர்கள் இவளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதபடி கமலக்கண்ணன் முகம் அகப்படுமா? எனத் தேடித் தேடிப் பார்த்தாள். நீண்ட நேரம் தேடினாள். நெருப்புத் திருவிழா முடிந்து மக்கட் கூட்டமும் கலைந்துவிட்டது. தான் தேடிய கமலக்கண்ணனைக் காணோம். கனகம் தன் அண்ணியுடன் பேசுவது போல், அங்கு நடைபெறும் இசை நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்வது போல் பாவனை செய்தாலும், தான் என்ன பேசுகிறாள், அண்ணி என்ன கேட்கிறாள், தான் என்ன பதில் சொல்கிறாள் என்ற நினைப்பே இல்லாது மிக்க தடுமாற்றத்துடன் நடக்கலானாள்.

வீட்டிற்குப்போய் உணவுகூட உட்கொள்ளாது வயிறு வலிப்பதாகச்சாக்குச் சொல்லிப் படுக்கைக்குச் சென்றுவிட்டாள். மன ஒருமைப்பாட்டிற்காக ஏரிக்கரைக்குச் சென்ற பாண்டியனும் இவர்கள் வருவதற்கு முன்பே வந்து படுத்து விட்டான். கனகத்திற்குத் தூக்கம் வரவில்லை. குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுதாள். தலையணை முழுதும் நனைந்துவிட்டது. தான் வந்த செய்தி வெற்றிபெறாமல் போகவே, மனம் உடைந்து ஒருமுறை நகைத்தாள். தனது வெற்றிப் பாதையிலே கண்ட இந்த முதல் தோல்விக்குக் காரணம் என்ன? என்று ஆராய விரும்பி, மீண்டும் சென்னைக்கே சென்று கமலக்கண்ணனைப் பார்க்க எண்ணிக் கோழி கூவும் வேளைக்கு முன்பே எழுந்து யாருக்கும் தெரியாமல் காட்டூரைக் கடந்து ஐந்து கல் தொலைவில் இருக்கும் மீஞ்சூர் இரயில் நிலையத்தை அடைந்தாள். அதிகாலை பால்காரர்கள் போகும் வண்டியில் சென்னைக்கே புறப்பட்டுவந்துவிட்டாள். சென்ட்ரல் நிலையத்திலிருந்து ஒரு டாக்சி மோட்டார் வண்டியில் ஏறி கமலக்கண்ணன் வீட்டை நோக்கி நுங்கம்பாக்கத்திற்குச் சென்றாள்.

(தொடரும்)

9-ம் பக்கத் தொடர்ச்சி

மனம் நொந்தார். வருத்தத்தினாலும், வேதனையாலும் செயலிழந்து நின்றுவிட்ட ஆந்தையாருக்கு "பளிச்"சென்று ஒரு உண்மை விளங்கியது. "இப்படித்தானே கொடுங்கோலன் ஒருவனின் ஆட்சியிலும் மக்கள் அழிந்து நாசமடைய வேண்டியிருக்கும்" என்று எண்ணினார். அடுத்த கணமே அவர் உடல் நடுங்கியது. "ஐயோ! நமது மன்னன் அப்படி மாறிவிடப் போகிறானே!" என்று பதறினார். ஓடினார் பாண்டியனின் அரசவைக்கு. தான் கண்ட காட்சியினையே எடுத்துக்காட்டாக வைத்து, மன்னன் அறிவுடை நம்பிக்கு அறிவுரை கூறத் தொடங்கினார்:

"அறிவுடை வேந்தே! வழியிலே நெல் வயல் ஒன்றை நான் கண்டேன். செழித்து வளர்ந்திருந்த அந்த வயலிலே பசித்து வாடிய யானை ஒன்று வெறிகொண்டு புகுந்தது. நெற்கதிர்களை ஆத்திரத்தோடு வளைத்து வளைத்து உண்ணத் தொடங்கியது. அந்தோ! அதற்கு உண்ணப் பயன்பட்ட தானியங்களின் தொகுதியைக் காட்டிலும் பலமடங்கு தானியங்கள் அதன் கால்களில் மிதியுண்டு அழிந்துவிட்டன. ஒரு நூறு காணி உணவுப் பொருள்கள் அதனுடைய கோர விளையாட்டினால் வீணாகியிருக்கும். ஆனால் அரசே! அதே நெற்கதிர்களை நல்ல முறையில் ஒழுங்காக அறுத்து, அரிசியாக்கிப், பின் சமைத்துச் சோறாக்கிக் கவளம்செய்து தருவதானால் ஒரு சிறு பகுதியே அந்த யானைக்குப் பல நாட்களுக்குப் போதுமானதாயிருக்கும்.

அதைப்போலத்தான், பாண்டியனே! நாட்டை அரசாளும் ஒவ்வொருவரும், தன்னுடைய வலிமையால், முரட்டுத்தனமாக குடிகளைக் கட்டாயமாக வருத்திப் பொருள் பெறக் கருதினால் அவனும் வாழான்; அவனால் உலகமும், மக்கள் இனமும் "யானை புகுந்த புலம்" போலவே அழிந்து ஒழிந்து நாசமாகிவிடும். அவ்வாறன்றி, அறிவோடு, முறையோடு, அன்போடு, வளம் நிறைந்து வாழும் குடிமக்களிடமிருந்து கடமையாகப் பெறுவானாயின் அரசும் சிறக்கும்; நாடும் செழிக்கும்" என்ற கருத்தமைந்த,

"காய் நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்(கு) ஆகும்
நூறு செறு ஆயினும் தமித்துப்புக்(கு)
(உணினே)
வாய் புகு வதனினும் கால் பெரிது கடிக்கும்.
அறிவுடை வேந்தன் நெறியறிந்து
(கொளினே)
கோடியாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான்; உலகமும் கெடுமே!

புலவர் பாடலில் அறத்தின் குரல் முழங்கிற்று; அரசியலறிவு ஒளிவிட்டுப் பிரகாசித்தது. புலவரின் முழக்கம் கேட்ட புவியாள் மன்னன், கலைநெஞ்சும், கருணை உள்ளமும் கொண்ட காவலனான். கவிதை உள்ளத்தில் ஆழ்ந்திருக்கும் உண்மையின் ஆற்றலை அனுபவத்தால் அறிந்தான் தமிழரசன். சான்றோராகிய பிசிராந்தையாரின் சொற்களைப் பொன்னே போல் போற்றி நல்லாட்சி நடத்தினான். "அறிவுடை நம்பி" என்ற இயற்பெயர் பெற்ற அவன், அதனையே அழியாப் புகழாகவும் பெற்றான். அவன் அல்லனோ மன்னன், அவன் அரசனன்றோ தமிழரசு!

★

"திராவிடன்" வளர்ச்சிக்கு

பம்பாய் மக்களின் அன்பளிப்பு

ரூ. 2000

9—5—59-ல் தாராவி செட்வாடித் திடலில் தோழர் ஆரியசங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடன் வளர்ச்சி நிதி சிறப்புக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர்கள் கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மொத்த வசூலில் கூட்டத்திற்கான செலவு தொகை போக மிச்சமான ரூ. 2000 (இரண்டாயிரம்) திராவிடன் நிதிக்காக பொதுச் செயலாளர் அவர்கள் வாயிலாக வழங்கப்பட்டது.

புதிய விருந்து!
சுவைசொட்டும் படைப்பு!!
துள்ளி ஓடும் நடையில்
தோழர்
ப. உ. சண்முகம்
எம். எல். ஏ.
அளித்திடும்
'காதல்பரிசு'
★
காதல்-
சோகம்-
நட்பு-ஆகிய
உணர்ச்சிகளின்
கூட்டுக்கலவை!
சுவை குறையாத ஓவியம்!
★
31-5-59 முதல்
தொடர்ந்து
வெளிவரும்!

தமிழோசை-1

முரசு முழங்குக

வித்துவான்
ஞா. தேவநேயர்,
எம். ஏ., பி. ஓ. எல்.,

பண்டைத் தமிழ் வேந்தராகிய சேர சோழ பாண்டியர் கொண்டிருந்த அரசர் சின்னங்களுள், முரசும் ஒன்றாகும். அது கொடை முரசு, முறை (நியாய) முரசு, போர் (வீர) முரசு என மூவகைப்படும். அவற்றுள் போர் முரசு என்பது போருக்கு மறவரைத் திரட்டுவதற்கும் அணிவகுத்துப் போருக்குச் செல்வதற்கும், போர்க்களத்தில் மறத்தொடு பொருவதற்கும் வெற்றிவிழாவிற்கும் அடிக்கப் பெறுவது.

அக்காலத்தில் அரசர்க்குப் போர்த்தொழில் சிறந்ததெனக் கருதப்பட்டதினாலும், வெற்றியுள்ள அளவே அவர்க்கு ஆட்சி நிலைத்திருந்ததினாலும், போரில் வெற்றி பெறுதற்கு முரசு முழக்கும் ஓரளவு துணை செய்ததினாலும், போர் முரசு தலைசிறந்த சின்னமாகக் கருதப் பட்டது.

நீராட்டிச் சந்தனம் பூசி மாலை யணிந்து பீலிசூட்டிப் பலியிடுவதும் அரசனோடொப்பத் தனி அரியணை யில் ஏற்றிவைப்பதும் போர்முரசிற்குச் செய்யும் சிறப்பாம். இதை,

'மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி
மணித்தார்
பொலங்குழை யுழிஞை யொடு பொலியச்
சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை''

என்னும் புறப்பட்டாலும் (50)

''விரவிய சந்தமென் சேறு மட்டித்துப்
பிரவியந் தழையொடு பிணையல்
வேய்ந்தன
பரவிய பலிபெறு முரசம் பன்மையில்
அரவியங் கதிர்கொள வதிர்ந்த
றைந்ததே''

என்னும் சூளாமணிச் செய்யுளாலும் (சுயம் 210) அறியலாம். அரசனின் அரியணை அரசு கட்டில் என்றும், முரசின் அரியணை முரசு கட்டில் என்றும் பெயர் பெறும்.

இனி, போர்க்களத்தில் உயிரைத் துரும்பெனக் கருதி ஊன்றிப் பொரும் போர்மறவர்க்குச் சிறந்த சின மறத்தை ஊட்டும் நோக்கத்தோடு, ஒரு புலியையேனும் வலிய காளையையேனும்கொன்று கோட்டு மண் குத்திநின்ற, கொல்லேறு

என்னும் கடுங்காளையின் தோலை யுரித்துச் சிவாமல் போர் முரசிற்குப் போர்த்து வைப்பதுமுண்டு.

'மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்
அண்ணல் நல்லே றிரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண்பிணி முரசம்''
(புறம் 288)

''ஓடா நல்லேற் றுரிவை தைஇய
பாடுகொள் முரசம்''
(அகம் 334)

''கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது
போர்த்த
மாக்கண் முரசம் ஓவில கறங்க''
(மதுரைக்காஞ்சி 732—3)

''ஏற்றுரி போர்த்த இடியுறு முழக்கின்
...முரசு''
(மணிமேகலை, 1: 29—31)

''புலிமருப் பழுந்தக் குத்திப் புலியொடு
பொருது வென்ற கலிகூர லுருமுச்
சீற்றக் கதழ்
விடை யுரிவை போர்த்த துளைகுரல்
முரசம்''
(சீவக சிந்தாமணி 2899)

என்பன காண்க.

இங்ஙனம் போர் முரசு ஒரு சிறந்த ஆற்றலுள்ள சின்னமாகக் கருதப்பட்டதினால், போரில் வென்ற அரசர் தோற்ற அரசரின் முரசத்தைக் கவர்வதும், முரசத்தைச் சிறந்த சின்னமாகப் புலவர் புகழ்வதும், பண்டை மரபாம்.

'இடியென முழங்கு முரசின்
வரையா ஈகைக் குடவர் கோவே'

என்றார் குறுங்கோழியூர் கிழார்.
(புறம் 17)

'உடலருந் துப்பின் ஒன்று மொழி
வேந்தரை
அணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப்
பிணியுறு முரசங் கொண்டகாலை'

என்றார் கல்லாடனார்
(புறம் 25)

*

இதுகாறுங் கூறியது, பண்டைத் தமிழரசர் தமிழ் நாட்டைக் காத்ததற்குக் கொட்டிய போர்முரசாம். இன்று வேண்டுவது தமிழைக் காத்தற்குக் கொட்டவேண்டிய முரசே.

உலகிலுள்ள பெருமொழிகளுள் தலையாயதாகவும், வடமொழிக்கு முந்தியதாகவும், ஆரியத்திற்கு வேராகவும் இருந்தும், வழிபாட்டிற்குத் தகாததென்றும், உயர்தரக் கூட்டுறவு' (சமுதாய) வழக்கிற்கு உரியதன்றென்றும், இழித்தும் பழித்தும் கூறப்படும் தமிழ் அதன் பழைய நிலைமையையும் தலைமையையும் அடையும் வரை, தமிழ் மக்கள் அனைவரும் அறப்போரில் சார்ந்து ஈடுபடவேண்டும்.

மலேயா நாட்டைச் சேர்ந்த சிங்கபுரக் குடியேற்றத் தமிழ் மக்கள், ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழகத்தார்போல் குலமத வேறுபாடின்றிக் குலவி வாழ்வது, கழிபெரு மகிழ்ச்சி தருவதொன்றாம்.

இன்று ஆங்கிலேயக் குடியேற்ற நாடாயிருக்கும் மலேயா கி. மு. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழாட்சி நடைபெற்ற தமிழர் குடியேற்ற நாடாக இருந்தது.

* * *

இந்து வாரியில் மூழ்கிப்போன, குமரிக் கண்டத்தின் தென் பாகத்தை வளம்படுத்திய பஃறுளி யாற்று மதுரையில் வாழ்ந்து வந்த பாண்டிய வேந்தருள் ஒருவன், கலப்படையோடு கடல்கடந்து சாவகம் என்னும் சாலித் தீவைக் கைப்பற்றி, அதன் கடற் கரையில், அலைநீர் அலைசுமாறு ஒரு பாறையில் தன் அடிச்சுவட்டைப் பொறித்து வைத்தது காரணமாக,

வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்னப் பட்டான்.

சாலி என்பது சாவகத்தின் (Java) பழந்தமிழ்ப் பெயர். சாலி என்பது செந்நெல். அதை யவ என்று ஆரியர் மொழிபெயர்த்தனர். யவ என்பது நெல் என்று பொருள்படும் வட சொல். அது பின்னர் ஜவ, ஜாவக எனத்திரிந்து தமிழில் சாவகம் என வழங்கி வருகின்றது. கடல் கடந்து கைப்பற்றிய கடுமுயற்சி தமிழரதாயிருந்தும், அதன் பயனை மிக எளிய முறையில் ஆரியச் சொல் கவர்ந்து கொண்டது. மறைக்காடு, முதுகுன்றம் (பழமலை) சிற்றம்பலம் (தில்லை) முதலிய தமிழ் நாட்டுப் பெயர்களே, முறையே, வேதாரண்யம், விருத்தாசலம், சிதம்பரம் முதலிய வடசொற் பெயர்களால் மறையுண்டிருக்கும்போது, வெளி நாட்டூர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை; வடமொழி தேவ மொழி யென்றும், பிராமணர் நிலத்தேவர் (பூசுரர்) என்றும் நம்பிய தமிழர் பேதைமையே இதற்குக் காரணம்.

“வானியைந்த இருமுந்நீர்ப்
போநிலைஇய இரும் பவ்வத்துக்
கொடும்புணரி விலங்கு போழக்
கடுக்காலொடு கரைசேர
நெடுங்கொடி மிசை யிதையெடுத்
தின்னிசைய முரசுமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய-துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட வுயர்கொற்றவ”

என்று மதுரை காஞ்சியுள் (75-88) மாங்குடி மருதனார் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியிருப்பது அவன் முன்னோன் செயலை அவன்மீது ஏற்றிக்கூறியே, இதனை,

‘நிலந்தந்த பேருதவிப் பொலந்தார்
மார்பின் நெடியோன் உம்பல்’

என்பதால் (மேற்படி 60—61) அறியலாம்.

இனி இடைக்காலத்து முன்னோரால் இழக்கப்பட்ட நாட்டைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீண்டும் கைப்பற்றினான் என்று கொள்வதும் ஒக்கும்.

பழம் பாண்டியனொருவன் சாலித் தீவுக்கரையில் தன் பாதச் சுவட்டைப் பொறித்ததை ‘அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி’ என்னும் சிலப்பதிகார அடி (11:17) உணர்த்தும். அவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்னப் பட்டதை ‘ஆழிவடிம்பம்ப நின்றானும் என்பதால் [நளவெண்பா 137] அறியலாம். சாவகம் ஒரு காலத்துத் தமிழாட்சிக்குட்பட்டிருந்தமைக்குச் சான்றாக இன்றும் அதன் நிலப் பிரிவுகள் பாண்டியன், மதியன், புகார், பாண்டிய வாசம், மலையன்கோ. கம்பிழி, செம்பூட்சேய், மீனன் காப்பு எனத் தமிழ்ப் பெயர் கொண்டு வழங்கி வருவதாகக் கூறுவர் ஆராய்ச்சியாளர்.

சாவகத்தின் அருகில் மதுரா [மதுரை] என ஒரு சிறு தீவுளது. இனி சுமத்ரா என்பது சுமதுரை என்றும் போர்னியோ என்பது பொருநை என்றும், மலேயா என்பது மலையம் என்றும் பொருத்திக் காட்டுவர். சுமதுரை என்பது நன்மதுரை எனப் பொருள்படுவது. ‘சு’ என்பது ஒரு வடமொழி முன்னொட்டு. பொருநை என்பது பாண்டி நாட்டில் இன்று தாமிரபரணி யென வழங்கும் ஆற்றின் தமிழ்ப் பெயர். மலையம் என்பது பொதிய மலையின் மறு பெயர். அது முதலாவது, குட மலையென்னும் மேற்குத் தொடர்ச்சி மலை முழுவதையும் குறித்து, பின்பு அதன் தென்கோடியில், அகத்தியரிருந்ததாகச் சொல்லப்பெறும் ஒரு பகுதிக்கு மட்டும் சிறப்புப் பெயராயிற்று. மலையம் என்னும் சொல் பெருமலை என்று பொருள்படும். ‘அம்’ என்பது ஒரு பெருமைப் பொருள். ஈறு, மதியம் என்றே முழு மதியைக் குறித்தல் காண்க. ஆகவே மலையா அல்லது மலேயா என்னும் நாடு, இன்று மட்டுமின்றித் தொன்று தொட்டும் தமிழர் தொடர்புடையதாய் இருந்து வருகின்றது. இந்நாட்டுச் சிங்காரத் தமிழர் ஏறுபோல் வீறுகொண்டு முழக்கும் தமிழ் முரசு வெற்றி முரசாகவுந் தெரிகின்றது.

*

கி. மு. பல்லாயிரம் ஆண்டாகப் பல் துறையிலும் தலைமை தாங்கி வந்த தனித்தமிழ், பிற்காலத்துப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யானைச் செல்கெழுகுட்டுவன் போன்ற பேதை வேந்தரால் வழிபாட்டு மொழியாகாதெனத் தள்ளப்பட்டு, எளி வந்தும் இளி வந்தும் இரங்கத்தக்க நிலையிலுள்ளது.

‘ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை’

[திருக்குறள் 837]

தமிழ் தான் இழந்த அரியணையை மீண்டும் பெற்று அதில் வீற்றிருக்க வேண்டுமாயின், அது முன்பிணைந்ததுபோல் ஆட்சி மொழியாதல் வேண்டும். அஃதன்றி, வேறு எவ்வகையாலேனும் அது தன் பழம் பெருமையை அடைந்துவிட முடியாது.

வடமொழி தேவமொழி யென்பது ஒரு பெரிய ஏமாற்றுக் கலையாகும். உலகில் தேவமொழி யென்று ஒரு மொழியுமில்லை. எல்லாம் மக்கள் மொழியே. ஏதேனுமொரு மொழி தேவமொழி யென்னும் பெயருக்குரியதாயின், அது தமிழாகத்தான் இருத்தல் கூடும். அதற்குக் காரணங்களாவன:—

(1) தமிழ் ஓர் இயன் மொழி திரிமொழியன்று

(2) அது மிகப் பழமையானது வடமொழிக்கு முந்தியது

(3) அது பன்மொழிகட்குத் தாய்.

(4) அது சிறந்த இலக்கியமுடைய உயர் தனிச் செம்மொழி.

(5) அதுஎல்லார்க்கும்பொதுவான அறவொழுக்கத்தை நடுநிலையாய் வலியுறுத்துவது.

(6) அது ஒரு வகுப்பார்க்கும் விலக்கப்படாதது.

வடமொழி, இங்கு கூறப்பட்டவற்றிற்கு நேர்மாறான இயல்புகளையுடையது. அதுதேவமொழியாயின், அதற்கு இனமான ஆங்கிலம், செருமனியம், இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளும், தேவமொழியாதல் வேண்டும். அவை அங்ஙனமல்ல என்பதை அனைவரும் அறிவர். வடமொழி யென்னும் கொள்கை, பிராமணர் தேவர் அல்லது தேவ மரபினர் என்னுங் கொள்கையின் மறுவடிவே. ஆதலால் அதன் பொய்மையை உணர்ந்து, தமிழர் பகுத்தறிவோடு பண்பட்டு வாழ்வாராக. தமிழ் முரசு முழங்குக.

★

கலைவழி

ஒரு நாட்டின் கலைதான் அந் நாட்டினை நாகரிகப் படியில் கொண்டுபோய் நிறுத்துவது. வரலாறு உள்ள நாட்டில் கலை இருக்கும். வரலாறு இல்லாத நாட்டில் அவ்வளவு பழம்பெருமை படைத்த கலை இருப்பதற்கில்லை.

மனப்பண்புதான் பண்பாடு [கலாசாரம்] என்பதற்கு அடிப்படை; அதிலிருந்து முளைப்பது நாகரிகம். ஒருவனின் இருதயத்திலிருந்து எழுவதே நற்கலைகள்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தமிழகம், சீனு, எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகள் பழம் பெரும் கலைகளும் பண்பாடும் கொண்டவை. இன்று உலக நாடுகள் அத்தனையிலும் உள்ள கலைகள் மேற்கண்ட நாட்டின் அல்லது நாடுகளின் கலைகளின் மறு தோற்றமேயெனலாம்.

கீழை நாடுகளை எடுத்துக்கொள்வோம். மேற்கண்ட பழங் கலை கொண்ட நாடுகளின் தொடர்பு பற்றிப் பார்ப்போம்.

இலங்கை மலேயா

மலேயாவிலும் இலங்கையிலும் தென்னிந்தியாவின் 'கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி' மக்களின் கலைகளே பெரிதும் தொடர்புற்றன.

பாலி நடனமும் ஜாவாவியர் நடனமும், இளங்கோவடிகள் யாத்த 'சிலப்பதிகாரம்' கூறும் பாவைக் கூத்து, நிழற்கூத்து என்பவற்றுடன் பெரும் ஒப்புடைமை கொண்டுள்ளன.

பாலி நடனத்தின் பருப்பொருள் இராமாயண மகாபாரதத்தை ஒட்டி உள்ளது. சாதாரணமாக அவர்களின் நாடகத்திற்கும், நடனத்திற்கும் நாயகன் அர்ஜுனன்தான். வித்தியாசம் ஏதாவது இருக்கலாம். உதாரணமாகஇந்தியக்கலை,எமனைக் கொடூரமானவனகக் காட்டுகிறது. ஆனல் பாலி: ஜாவானியக் கலைப்படி எமன் மிக நல்லவன். பாலி ஜாவானிய இசையில் இந்தியக் கர்னுடக இசைச் சாயல்கள் உள்ளன.

எகிப்திய நாகரிகச் செல்வாக்கும் மலேயாவில் ஏற்பட்டுள்வது.

இலங்கையில் தென்னிந்தியக் கலைச் செல்வாக்கே அதிகம். எகிப்திய அராபிய நாகரிகமும் உண்டு.

சயாமும் சீனமும்

தாய்லாந்தில் சீனக் கலைகள் முழுக்க முழுக்கக் காணப்படுகின்றன; நமது கலைகளும் ஓரளவு இடம் பெற்றுள்ளன.

சீனுவின் நடனபாணியில், 'தற்காத்துக் கொள்ளும்' 'சீன அடி' என்று ஒன்று உண்டு. அதுமட்டுமின்றி 'கோன்ஸ்' என்ற சீன நாடக மாதிரியும் உண்டு.

சயாமிய நடன, நாடகங்கள் இராமாயண மகாபாரதங்களைப் போலுள்ளன. இராமாயணத்தைச் சயாமியர்கள் இன்றும் 'இராமாகியாண' என்று கூறுவர்.

இதில் வியந்தகு செய்தி என்னவெனின் 'இராமாகியாண' என்பதற்கு மிகவும் 'கம்பராமாயணம்' ஒத்திருக்கிறது. ஆனல் 'வால்மீகி ராமாயணம்' ஒத்துவரவில்லை.

சயாமின் புகழ்வாய்ந்த நிழற்கூத்து தமிழனின் மிகப் பழங்காலக் கலையம்சம்.

சீனுவும் நாமும்

இந்தியாவில் வழங்கப்படும் 'சீனத்து அடி', 'சீனப் பட்டு' 'சீனச் சட்டி' முதலிய சொற்களிலிருந்து சீன—தமிழகப் பெரும் வர்த்தகத்தொடர்பை அறியலாம்.

சீனுவுக்கும் நமக்கு மிடையிலான கலாசாரப் பரிமாற்றத்தில் சிலவற்றைக் கிடைத்த அத்தாட்சி கொண்டு மட்டும் கூறுகிறேன்.

2700 வருடங்களுக்கு முன்பிருந்தே நிலம், நீர் வழியாகச் சீனுவும் தமிழகமும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தன.

இசை

தென்னிந்திய இசைக்கும் சீன இசைக்கும் பெரும் ஒற்றுமை தென்படுகிறது. அவற்றில் சில:

சீனுவில் இசைச் செல்வாக்கு தென்னிந்தியச்செல்வாக்கே. ஏனெனில் தென்னுட்டு இசையே வடநாட்டின் இசையாகவும் இருந்தது. அராபியா, பாரசிகத் தொடர்பு வடநாட்டில் அதிகமாக ஆக, வடநாட்டு இசை என்ற ஒன்றுஏற்படலாயிற்று. 'இதற்கு குமரி முதல் இமயம் வரை ஒரு குடை வைத்து உலகாண்ட சேரலாதன்' என்ற தொடரைக் காணலாம்)

சிலப்பதிகாரம் கூறுகின்ற தமிழ்ப்பண்ணின் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழு சுரங்களின் பெயர்களுக்கும் சீனப்பண்ணின் சுரங்களின் பெயர்களுக்கும் வெகு பொருத்தம் உள்ளது. சில சுரங்களின் தமிழ்ப் பெயர்களே சீன சுரங்களுக்கும் பெயர்களாக வழங்குகின்றன.

ச	சட்சம்
ரி	ரிடபம்
க	காந்தாரம்
ம	மத்திபம்
ப	பஞ்சம்
த	தைவதம்
நி	நிடாதம்

இதனை, முறையே

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழு தமிழ்ப்பண் சுரங்களாகக் கூறும் இசை நூல்.

உழை என்ற சொல்லை 'ஹுலி' என்று சீன இசைச்சுரம் கூறும்; விளரி என்பதை விளவி என்றும் 'கைக்கிளை' என்ற தமிழ்ச் சுரத்தை, 'கைக்கிளை' என்றேயும், சீன இசை கூறும்.

இசைக்கருவி

'சேமகறம்' அல்லது 'சேண்டை' என்ற தமிழ் இசைக் கருவியையும், சீனப் பின்னணிக்கு இன்றியமையாத இலைதாளத்தையும் ஒப்பிடலாம். தமிழிலும் இலைதாளம் உண்டு.

கதையுடன் நடனத்தை இட்டுக் காட்டும் சீன நாடக முறையும் மலையாள கதகளியும் ஒன்று அல்லவா?

பழங்காலத் தமிழ் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களைப்போல், சீன நாடகங்களில் வண்ணமிக்க 'மேக்கப்' முறை காணப்படுகிறது.

மற்றும் பஞ்ச சிங்க நிருத்தம் ஆகிய நடனங்களை, 'சிங்க நடனம்' முதலிய சீன நடனங்களுடன் ஒப்பிடலாம்.

*

Bes